பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 28, வியாழக்கிழமை 11.05.2017 கதிர் 186

உங்கள் நிறுவனங்களுக்கு திறமையான பணியாளர்களை குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள
WINSTAR JOB BANK
106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
web: www.winstar jaffna.com
Fb : winstar job bank
021 320 2789 c/400

# சந்திரிகாவின் தீர்வு யோசனையே சிறந்தது என்கிறார் மாவை

## அதையே பரிசீலிக்கிறோம் எனவும் தெரிவிப்பு



கொழும்பு, மே 11

"பிராந்தியங்களின் ஒன்றிய ஆட்சி முறை, இணைந்த வடக்கு - கிழக்கில் முஸ்லிம்களுக்குத் தனியான நிர்வாக அலகு ஆகியவற்றை உள்ளடக்கி 1995 ஒகஸ்ட் 3 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்வைத்த யோசனையே நல்ல தீர்வுத் திட்டம். அதனையே எதிர்கால மேன்மைக்கு உகந்ததாக நாம் இப்போதும் பரிசீலிக்கின்றோம்."

- இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர்களுள் ஒருவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோனதிராசா.

பக்கம் 18 »

# இலங்கைத் தலைவர்களுடன் மோடி உத்தியோகபூர்வ பேச்சு இல்லை!

## இன்று மாலை வருகை: நாளை மாலை புறப்பாடு

கொழும்பு, மே 11

இன்று மாலை கொழும்பு வரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நாளை மாலையே இந்தியா திரும்புவார்.

சர்வதேச வெசாக் தின நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக இலங்கைக்கு வரும் இந்தியப் பிரதமருக்கும் இலங்கை அரசுத் தலைவர்களுக்கும் இடையில் உத்தியோகபூர்வப்பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் ஏதும் ஒழுங்கு படுத்தப்படவில்லை.

எனினும், இலங்கையில்பல் வேறுபொதுநிகழ்வுகளில்பங்கு பற்றும் இந்தியப் பிரதமர் அச்சமயத்தில் இலங்கைத் தலைவர்களுடன் ஊடாடுவார் எனப் புதுடில்லியில் வெளியுறவுப் பேச்சாளர் தெரிவித்தார்.

பக்கம் 18 »

# வடக்கு முதலமைச்சரிடம் மன்னிப்பு கோரும் வேலையற்ற பட்டதாரிகள்



யாழ்ப்பாணம், மே 11

"வடமாகாண முதலமைச்சரின் மனம் உளைச்சலுக்கு உள்ளாகும்வகையில்நாங்கள் செயற்பட்டிருந்தால் அதற்காக அவரிடம் மன்னிப்புக் கோருகிறோம்."

பக்கம் 18 »

# தமிழ்க் கூட்டமைப்பினருடன் பேச்சு மோடி புறப்பட்டுச் செல்கையிலேயே

கொழும்பு, மே 11

இன்று கொழும்பு வரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, நாளை மாலை வரையிலான தனது இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டுநாட்டைவிட்டுப்புறப்பட்டுச்செல்லவிருக்கையிலேயே - கட்டுநாயக்காவில் வைத்தே - தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசவிருக்கின்றார்.

ஆகவே, தற்போதைய அமைதி முயற்சிகள் மற்றும் அரசியல்செயற்பாடுகள்தொடர்பில் கூட்டமைப்பின் கருத்தை உள்வாங்கும்,இந்தியப்பிரதமர், அவை தொடர்பில் தமது பிரதி

பக்கம் 18 »

# இந்தியப் பிரதமர் மோடியை மஹிந்த ராஜபக்ஷ சந்திப்பார்?



இன்று மாலை கொழும்புக்கு வந்து நாளை மாலையில் புறப்படும் வகையில் மிக நெருக்கமானநிகழ்ச்சிநிரல் ஏற்பாட்டுடன் விஜயம்செய்யும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அந்த இறுக்கமான நிகழ்ச்சித்திட்டத்துக்கு மத்தியிலும் முன் னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் சந்திக்கக்கூடும் எனக் கொழும்பில் சில வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தியத் தரப்பிலிருந்து இந்தத் தகவலை நேற்றிரவு வரை ஊர்ஜிதப்படுத்த முடிய வில்லை.



# மிக நீளமான மணல் புத்தர் கொழும்பில் வடிவமைப்பு!

## இந்தியக் கலைஞரின் கைவண்ணம்




கொழும்பு, மே 11

உலகிலேயே மிகவும் நீளமானமணல்புத்தர்கொழும்பில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தப்புத்தர் சிலையை வடிவமைப்பதற்காக, இந்தியாவில் இருந்து வருகை தந்த புகழ் பெற்ற கலைஞர் சுதர்சன் பட்நாயக் இதனை நிறைவு செய்துள்ளார்.


14ஆவது சர்வதேச வெசாக் தினத்தை முன்னிட்டே இந்தப் புத்தர் சிலை வடிவமைக்கப் பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தால் ஏற்பாடுசெய்யப்பட்ட 14 ஆவது சர்வதேசவெசாக்தினக்கொண்

பக்கம் 18 »

# பௌத்தத்துக்கு மேன்மையான இடம் தொடரும் என ஜனாதிபதி திட்டவட்டம்

## பிற மதங்களுக்கும் நியாயம் வழங்கப்படுமாம்



கொழும்பு, மே 11

அரசமைப்பில்,தற்போது பௌத்தத்துக்குக்குறிப்பிடப்பட்டுள்ள மேன்மையான இடம்தொடர்ந்தும்பாதுகாக்கப்படும். அதேசமயம் ஏனைய சமயங்களுக்கும் நியாயம் வழங்கப்படும். இதுவே அரசின் நிகழ்ச்சித் திட்டம்.

- இவ்வாறு அறிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

பக்கம் 18 »

## அப்ப அருணாசலம்



அப்ப... கட்டுநாயக்காவில வைச்சு பலாலி பற்றிப் பேசுவினம் போல....!

# பலாலி விமான நிலையம் குறித்தும் மோடி கொழும்புடன் பேச வேண்டும்

## சுரேஷ் பிறேமச்சந்திரன் கோரிக்கை



யாழ்ப்பாணம், மே 11

இந்தியப் பிரதமர் மோடி தனது இலங்கை விஜயத்தின் போது, இந்திய அரசின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ள பலாலி விமான நிலையத்தைப் பிராந்திய விமான நிலையமாகத் தரம் உயர்த்துவது குறித்து இலங்கை அரசுடன் பேச வேண்டும்.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வின்

பக்கம் 18 »

# போக்குவரத்து விதிகளை அறிவுறுத்தி யாழ். நகரில் விழிப்புணர்வு பதாகைகள்



யாழ்ப்பாணம், மே 11

யாழ். நகரப் பகுதிகளில் போக்குவரத்து விதிமுறைகளை அறிவுறுத்தி பொலிஸாரால் விழிப்புணர்வுப் பதாகைகள் கட்டப்பட்டு வருகின்றன.

யாழ். நகர் முதலாம் குறுக்கு சந்திக்கு அருகில் நேற்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ன இந்தப் பதாகைகள் கட்டும் செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தார்.

இந்தப் பதாகையில், பிரதான வீதிக்கு உட்செலுத்துவதற்கு முன்னர் நிறுத்தவும், சமிக்ஞை விளக்கை அவதானிக்கவும், பச்சை விளக்கு ஒளிரும் போது வீதியின் இரு பக்கங்களையும் நன்கு அவதானித்து பிரதான வீதிக்குச் செல்லவும், எப்போதும் வீதியின் இடது பக்கமாக வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிளைச் செலுத்தவும் போன்ற அறிவுறுத்தல்கள் உள்ளன.

இந்தப் பதாகைகள் யாழ். நகரப் பகுதிகளின் பிரதான வீதிகள் மற்றும் ஏனைய நகரப் பகுதிகளிலும் பொலிஸாரால் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதுபற்றி யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ன கருத்து தெரிவிக்கையில், விபத்துக்கள் அதிகரிக்கின்றமையால் உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக பொலிஸ் திணைக்களத்தின் ஊடாக போக்குவரத்து விதிமுறைகளை மக்கள் தெரிந்து கொள்வதற்காகவும், வீதிகளில் அவதானமாக செல்வதற்காகவும், மக்களின் பாதுகாப்புக்காகவும் இவ்வாறான அறிவுறுத்தல்களை மக்களுக்கு வழங்கும் நோக்கில் இந்தச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. -என்றார். (ஐ)

# முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் கேளிக்கை நிகழ்வுகள் வேண்டாம்

## முல்லை. சிவில் அமைப்புகள் கோரிக்கை

முல்லைத்தீவு, மே 11

முள்ளிவாய்க்கால் இனப்படு கொலையை நினைவு கூரும் நாளில் கேளிக்கை நிகழ்வுகளை நடத்திப் பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களை நோகடிக்க வேண்டாம் என்று முல்லைத்தீவு மாவட்ட சிவில் அமைப்புகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவு கூரும் மே மாதம் 18 திகதியோ அல்லது அதன் பெயரிலோ எந்தவிதமான களியாட்ட நிகழ்வுகளையும் நடத்த வேண்டாம்.

எமது இனம் அழிக்கப்பட்ட அன்றைய நாளை நாம் கொண்டாட்டமாகக் கருதிவிடமுடியாது. உணர்வு பூர்வமாக எமது உறவுகளுக்கு அஞ்சலி செய்து பூசிக்கும் நன்நாளில், எமக்கு நடந்த வன்கொடுமையை மறந்து கேளிக்கை நிகழ்வுகளில் எம்மை ஈடுபடுத்திக் கொள்வது எம் இனத்துக்குச் செய்யும் துரோகமாகவே கருதப்படும்.

காணாமற்போனவர்களுக்குப் பதில் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், பொது மக்களின் காணியில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என் பதற்காகவும் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்படு வருகின்றன.

இந்தக்காலகட்டத்தில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை அடியொற்றிக் கேளிக்கையில் யாரும் ஈடுபடுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மேலும் தெரிவித்துள்ளனர். (ஐ)

# ஞானச்சுடர் வெளியீடு

வல்வெட்டித்துறை, மே 11

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையால் பிரதி மாதந்தோறும் வெளியிடப்பட்டு வரும் ஞானச்சுடர் ஆன்மீகச் சஞ்சிகையின் 232 ஆவது இதழான மே மாத இதழ் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆச்சிரமப் பொறுப்பாளர் அமுதகலாசுரபி செ.மோகனதாஸ் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை ஓய்வுநிலை கிராம அலுவலகர் க.ஸ்ரீஸ்கந்தராசாவும், மதிப்பீட்டுரையை ஓய்வுநிலை அதிபர் திருமதி தவமலர் சுரேந்திரநாதனும் நிகழ்த்துவர். (ச)

# பிலியந்தலைச் சூட்டுச் சம்பவம்; விசாரிக்க 11 பொலிஸ் குழுக்கள்!

கொழும்பு, மே 11

பிலியந்தலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள 11 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

கல்கிஸை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியின் தலைமையில் 8 குழுக்களும், 3 விசேட அதிரடிப் படை பொலிஸ் குழுக்களும் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் ஊழல் தவிர்ப்பு பொலிஸ் பிரிவின் அதிகாரிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒரு பொலிஸ் அதிகாரி உயிரிழந்துள்ளார்; ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிதாரர்கள் ரி - 56 ரக துப்பாக்கி, பிரவுனிங் ரக பிஸ்டல் என்பவற்றைப் பயன்படுத்தி இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதேவேளை, பிலியந்தலை சூட்டுச் சம்பவம் தொடர்பில், சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க பொலிஸ் மா அதிபரிடம் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளார்.

சம்பவம் தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கை ஒன்றை மூன்று நாள்களுக்குள் தனக்கு வழங்குமாறும் அமைச்சர் சாகல ரத்நாயக்க பொலிஸ் மா அதிபரிடம் கோரியுள்ளார்.

அதன்படி, அறிக்கையைத் தயார் செய்வதற்காக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம். ஆர். லதீப், பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர நியமித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதிகரித்துவரும் இந்தியப் பெருங்கடல் வெப்பம்!

இந்தியப் பெருங்கடல் வெப்பமடையும் வேகம் அதிகரித்துள்ளது என்று அண்டார்டிக் மற்றும் பெருங்கடல் ஆய்வுக்கான தேசிய நிலையத்தின் பணிப்பாளர் ரவிச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஏனைய பெருங் கடல்களுடன் ஒப்பிடும் போது இந்தியப் பெருங்கடல் மிக வேகமாக வெப்பமடைந்து வருகிறது, என்று அவர் கூறியுள்ளார். செய்மதி கண்காணிப்புக்கள், வெப்பநிலை அட்டவணைகள் மற்றும் ஏனைய தரவுகளில் இருந்து இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது, என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


# மரண அறிவித்தல்



## திருமதி மார்க்கண்டு இராசம்மா

காரைநகர், களபூமி, கல் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் இல. 83/9, நந்தி ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி. மார்க்கண்டு இராசம்மா அவர்கள் செவ்வாய்க்கிழமை (09.05.2017) அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற முருகேசு (வையாபுரி) - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரமு - பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பாக்கியம், காலஞ்சென்ற கனகரட்ணம், காலஞ்சென்ற விஜயரட்ணம், சரஸ்வதி, காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை, காலஞ்சென்ற பூபாலசிங்கம், அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மங்கையர்க்கரசி, சிறீநாதன், மகேஸ்வரி, தனலட்சுமி, சரஸ்வதி, சிறீதரன், விஜயகலா ஆகியோரின் அன்புத்தாயாரும் தில்லைநாதன், காலஞ்சென்ற கங்காதேவி மற்றும் கௌரிதேவி, கிருபானந்தம், யோகநாதன், காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதன், ஷர்மினா, திவாகினி, மதோராணி, பிரணவன், பவித்திரா, திவ்வியா, சிவகஜன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் சேஷ்தா, ரெனின் அன்புப்பூட்டியும் காலஞ்சென்றவர்களான நடராஜா, திருமதி மங்கையக்கரசி, திருமதி சரஸ்வதிப்பிள்ளை, பரமசாமி, தம்பிப்பிள்ளை, கணேசபிள்ளை மற்றும் திருமதி சிவஞானம் ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.05.2017 இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : ப.மார்க்கண்டு(கணவர்), தொ.பே : 021 - 2221963

# அமைச்சரவை மாற்றத்துக்கு ஜனாதிபதி, பிரதமர் இணக்கம்!

கொழும்பு, மே 11

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் அமைச்சரவை மாற்றங்கள் தொடர்பில் இணக்கம் ஒன்றுக்கு வந்துள் ளனர் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு இந்தத் தகவலை வெளியிட்ட அவர், அமைச்சரவை மாற்றம் நிச்சயம் இடம்பெறும் என்று கூறியிருக்கிறார்.

எனினும் தகுந்த தருணத்தில் அது மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்களின் அடிப்படையில் இந்த மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளது எனக் குறிப்பிட்ட அவர், முன்னைய அரசாங்கம் 2010ஆம் ஆண்டு பதவிக்கு வந்ததும் முதல் வருடத்திலேயே அமைச்சரவை மாற்றத்தை மேற்கொண்டது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

## முகவரிடம் ஏமாந்த நால்வர் முறைப்பாடு!

வடமராட்சி, மே 11

வெளிநாட்டுக்குச் செல்லும் நோக்கில் முகவரிடம் பணம் கொடுத்து ஏமாந்த நான்கு பேர் நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த உபமுகவர் ஒருவரிடம் வெளிநாடு செல்வதற்காக தலா ஒரு லட்சம் ரூபா வீதம் இவர்கள் வழங்கியுள்ளனராம்.

அவ்வாறு பணம் பெற்றுக் கொண்ட முகவர் தங்களை வெளிநாடு அனுப்பாத காரணத்தினால் பாதிக்கப்பட்ட நால்வரும் இது தொடர்பில் நேற்று முன் தினம் நெல்லியடிப் பொலிஸில் முறையிட்டுள்ளனர். (உ-44)

## விளக்கமறியலில்

துன்னாலை பகுதியில் கோஷ்டி மோதலில் ஈடுபட்டவர் என்று கூறப்படும் ஒருவரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நளினி கந்தசாமி உத்தரவிட்டார். கடந்த மாதம் துன்னாலை-வேம்படிப் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் நெல்லியடிப் பொலிஸாரால் இவர் கைது செய்யப்பட்டிருந்தார். (உ-44)

## வவுனியா ஊடகவியலாளர்களின் உதவியுடன் திருடன் மடக்கிப்பிடிப்பு

புதுக்குடியிருப்பு தொழிற்சாலையொன்றில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவரை ஊடகவியலாளர்கள் இனம் கண்டு பொலிஸாரின் உதவியுடன் மடக்கிப்பிடித்த சம்பவம் நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

கடந்த முதலாம் திகதி புதுக்குடியிருப்பு தொழிற்சாலையொன்றில் பணியாற்றி வந்த நபரொருவர் தொழிற்சாலையில் எவரும் இல்லாத நிலையில் அங்கிருந்த அலுவலகத்தில் பணம் வைக்கப்பட்டிருந்த பெட்டியை உடைத்துத் திருடியுள்ளார்.

இந்நிலையில் அங்கிருந்த கண்காணிப்புக் கமராவில் பதிவு செய்யப்பட்ட சம்பந்தப்பட்ட நபர் பணம் திருடும் வீடியோ காட்சி சில இணையத்தளங்களில் வெளியாகியிருந்தது.

இந்நிலையில் நேற்று அந்த நபர் வவுனியா நகர்ப் பகுதியில் நடமாடுகின்றமையை அவதானித்த ஊடகவியலாளர்கள் குழு அந்தத் தொழிற்சாலையின் உரிமையாளருடன் தொடர்பு கொண்டு அந்நபர் தொடர்பான மேலதிக விவரங்களைக் கோரிப் பெற்றுக் கொண்டது. குறித்த நபரே திருடன் என்பதையும் ஊடகவியலாளர்கள் உறுதிப்படுத்திக் கொண்டனர். எனினும் அந்த நபர் ஊடகவியலாளர்களின் அவதானிப்பில் இருந்து தலைமறைவாகியிருந்தார். இந்நிலையில் வவுனியா பொலிஸாருக்கும் ஊடகவியலாளர்கள் தகவல் வழங்கினர்.

இதனையடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்தனர். பொலிஸாருக்கு உதவியாக ஊடகவியலாளர்களும் தலைமறைவாகிய நபரை வர்த்தகநிலையங்கள், பேருந்துகள், விடுதிகளில் தேடினர்.

இந்நிலையில் வவுனியா முதலாம் குறுக்குத் தெருவில் இருந்த விடுதியொன்றில் அந்தத் திருட்டுடன் தொடர்புடைய நபர் இருக்கின்றமையை அறிந்து கொண்ட ஊடகவியலாளர்கள் பொலிஸாருக்குத் தகவலை வழங்கி அந்த நபரை கைது செய்ய உதவினர்.

தற்போது திருட்டுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் அந்நபரை வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரித்து வருகின்றனர்.

இந்நிலையில் ஊடகவியலாளர்களின் செயற்பாடு குறித்து மகிழ்ச்சி தெரிவித்த பொலிஸார், ஊடகவியலாளர்களின் சமூகப் பணி குறித்தும் வாழ்த்து தெரிவித்தனர். (உ-100)

## வெசாக் பண்டிகையை முன்னிட்டு பசுமாடு வழங்கி வைப்பு



வவுனியா, மே 11

வெசாக் பண்டிகையை முன்னிட்டு வவுனியா மாவட்டச் செயலகத்தினால் வறிய குடும்பத்திற்கு வாழ்வாதார உதவியாகப் பசுமாடு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ரோஹண புஸ்பகுமாரவினால் நேற்று மாலை இது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ்குமார், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (உ-100)

## மோடியின் நிகழ்வில் மஹிந்த ராஜபக்ஷவும்!



கொழும்பு, மே 11

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கையில் பங்கேற்கும் நிகழ்வில் தாமும் பங்கேற்க உள்ளார் என முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ருவான்வெல்லையில் உள்ள விகாரையொன்றில் நேற்று வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வெசாக் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இன்று மாலை இலங்கைக்கு வருகைதரவுள்ளார்.

இதன்போது, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ள சர்வதேச வெசாக் பண்டிகை நிகழ்விலும் பங்கேற்கவுள்ளார்.

இதன் பின்னர், டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலை திறந்துவைக்கின்றமையுடன், நோர்வூட் மைதானத்தில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டமொன்றிலும் அவர் பங்கேற்கவுள்ளார்.

இந்த நிலையில், மோடி இலங்கையில் பங்கேற்கும் நிகழ்வில் தாமும் பங்கேற்க உள்ளார் என மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். (உ)

## யாழ். நகரில் நடந்த வெசாக் நிகழ்வுகள்


**யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தை அண்டிய பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற வெசாக் நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்கள். அந்தப் பிரதேசம் முழுவதும் வெசாக் அலங்காரப் பந்தல்களினால் சோடிக்கப்பட்டுள்ளன. நேற்று இரவு பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் அப்பகுதிக்குச் சென்று வெசாக் சோடனைகளைப் பார்வையிட்டனர்.**











## வில்பத்துக் காட்டில் வெளிநாட்டு முஸ்லிம்கள்? தேடிப் பார்க்க வேண்டும் என்கிறார் ஞானசாரர்

வில்பத்து, மே 11

வில்பத்து காட்டில் வெளிநாட்டு முஸ்லிம்கள் குடியேற்றப்பட்டுள்ளனரா எனத் தேடிப் பார்க்க வேண்டும் என பொதுபலசேனாவின் வண. ஞானசார தேரர் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

பெரும்பான்மை ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ள அவர், அதிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு :-

கடந்த வாரம் மியன்மாரில் இருந்து அகதிகள் என்ற போர்வையில் இலங்கைக்குள் வந்துள்ளவர்களுக்காக ரிஷாத் பதியுதீன் சட்டத்தரணி அனுப்பியமையைப் பார்க்கும் போது அதன் பின்னணியில் பலத்த சந்தேகம் எழுந்துள்ளது.

வில்பத்து காட்டில் வெளிநாட்டு முஸ்லிம்கள் குடியேற்றப்பட்டுள்ளார்களா எனத் தேடிப் பார்க்க வேண்டும்.

மியன்மார் அகதிகள் பாதுகாப்பு பிரிவினரின் கண்ணில் பட்டதால் அவர்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகின. இல்லாவிட்டால் அவர்களை வில்பத்து அல்லது கிழக்கில் குடியேற்றி இருப்பார்கள்.

வெளிநாடுகளிலிருந்து தொடர்ந்து முஸ்லிம்கள் அகதிகளாக வந்து குடியேறுகின்றனர். நீர்கொழும்பில் மாத்திரம் 1500 பேர் தங்கியுள்ளனர். இவர்கள் போதைப்பொருள் விற்பனை போன்ற சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றமையால் எமது கலாசாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு நாடுகளிலிருந்தும் முஸ்லிம்கள் இலங்கைக்கு வந்து தங்கியிருக்கிறார்கள். மாலைதீவிலிருந்து மாத்திரம் இங்கு வந்து 50 ஆயிரம் பேர் தங்கியிருக்கிறார்கள்.

இவர்கள் பல்வேறு சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்களால் மீதொட்டமுல்லைக் குப்பைமேடு போலாகியுள்ளது கொழும்பு.

எதிர்காலத்தில் மீதொட்டமுல்லை அனர்த்தத்தை விட பாரிய அனர்த்தம் இங்கு ஏற்படும். இந்த விடயங்களை நாம் எடுத்துச் சொன்னால் நாம் சதி செய்பவர்கள், இனக்கலவரத்தை உருவாக்க முயற்சிப்பவர்கள் என எம் மீது குற்றம் சுமத்தப்படுகிறது. - என்றார். (உ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## போராட்டப் பண்பியல்புகள்

இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை போராட்டமே வாழ்வு என்றாகிவிட்டது.

1948 இல் இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பிருந்தே, இலங்கைத் தமிழர்களின் போராட்ட வாழ்வு தொடங்கிவிட்டது. அரசியல் உரிமைகளுக்கான - வாழ்வியலுக்கான- நீதிக்கான - அவர்களின் போராட்டம் நெடியது; நீண்டது. ஏழு தசாப்தத்துக்கும் மேற்பட்ட வரலாற்றுக் ஓட்டத்தைத் தாண்டியது.

முதல் மூன்று தசாப்த காலம் அஹிம்சை வழியில் - அறநெறியில் - காந்திய மார்க்கத்தில் - நடந்தது போராட்டம்.

அடுத்த மூன்று தசாப்தங்கள் ஆயுத வழியில் நெருப்பாற்றை நீந்திக் கடக்கும் - ஜீவ மரணப் போராட்டம்.

இப்போது கடந்த எட்டு ஆண்டுகளாக மீண்டும் அதே அஹிம்சை வழி - அறநெறி - போராட்டங்கள்.

காலத்தோடு போராட்ட வடிவங்கள் மாறினவாயினும் போராட்டமே வாழ்வு என்ற நிலையில் எந்த மாற்றமும் இல்லை.

இலங்கையில் வடக்கு, கிழக்கைத் தாயகமாகக் கொண்ட தமிழர்கள் சுமார் 12 முதல் 13 வீதத்தினரே. இதில் வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழ்பவர்கள், புலம்பெயர்ந்தவர்கள் போக இந்தத் தமிழர் தாயக மண்ணில் எஞ்சியிருப்போர் - தங்கியிருந்து வாழ்வோர் - வெறும் 6 சதவீதத்தினர் மட்டுமே.

இந்த 6 சதவீத மக்களுக்கு மத்தியிலிருந்து முகிழ்ந்த ஆயுதப் போராட்ட சக்திகள், மொத்தம் 75 வீதமான சிங்களவர்களைக் கொண்ட தேசத்தில் முழுச் சிங்களப்படைகளுக்கு எதிராக சுமார் இரண்டரை தசாப்த காலம் கண்ணுக்குள் விரலைவிட்டு ஆட்டியபடி போராட்டம் நடத்திக் கொண்டிருந்த அதிசயத்தை - அற்புதத்தை - கண்டோம்.

மொத்தம் ஆறு சதவீதத்துக்கும் குறைவான மக்கள் கூட்டத்தின் மத்தியிலிருந்து முகிழ்ந்த ஒரு படையணி இவ்வளவு தூரம் உலகை வியக்கவைக்கும் அதிசய இராணுவ சாதனைகளை இந்த மண்ணில் நிகழ்த்திக் காட்டியது. அதற்குப் பிரதான காரணங்கள் அந்த இயக்கத்துக்கு மக்கள் மத்தியில் இருந்த பேராதரவும் போராளிகளின் இணையற்ற தியாகமும்தான்.

எந்தப் போராட்டமும் பயனுள்ள வகையில் முன்னெடுக்கப்பட வேண்டுமாயின், அதற்கு மக்கள் ஆதரவு அவசியம்; கட்டாயம்.

தமது மக்களின் ஆதலைவப் பெறாத போராட்டங்கள் தோற்றுப் போய் விடும் என்பது திண்ணம்.

இப்போது மீண்டும் அஹிம்சைப் போராட்டங்களை நமது மக்கள் நாடியிருக்கின்றனர்.

நில மீட்புக்கான போர், கைதிகளை விடுவிப்பதற்கான போர், காணாமற்போனோரைக் கண்டறிய வற்புறுத்திப் போர், நீதி-நியாயமான தீர்வு கோரிப் போர் - பொறுப்புக் கூறலை வலியுறுத்திப் போர் என்று பல்வேறு போராட்டங்கள் நம் மத்தியில் இன்று நடக்கின்றன. நமது மக்களின் ஆதரவு இருந்தால் மட்டுமே இந்தப் போராட்டங்கள் வெற்றிபெற முடியும்.

இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில் சில அஹிம்சைப் போராட்டங்கள் ஈண்டு குறிப்பிடத்தக்கவை.

தந்தை செல்வாவின் வழிகாட்டலில் 1961 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னெடுத்த சத்தியாக்கிரகப் போராட்டம் அதில் ஒன்று. வடக்கு, கிழக்கில் உள்ள அரச செயலகங்களுக்கு முன்னால் அஹிம்சைப் போராளிகள் முன்னெடுத்த 'குந்துமறியல்' போராட்டம் இலங்கைத் தமிழர்களை ஒரு தேசமாக எழுச்சி கொள்ள வைத்தது.

1986 இல் தமிழகத்தில் தமது இயக்கத்தின் தொலைத் தொடர்புக்கருவிகள் பறிமுதல் செய்யப்பட்டமையை ஆட்சேபித்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஒரு சொட்டு நீர் தன்னும் அருந்தாமல் முன்னெடுத்த சாகும் வரையான உண்ணா விரதப் போராட்டம் இந்திய ஆட்சியாளர்களையே மனம் மாற வைத்தது. தமிழக முதல்வர் எம்.ஜி. ஆர். கலங்கிப் போனார். பிரபாவின் கோரிக்கைக்கு அவர் உடன் இணங்க வேண்டியவரானார்.

மற்றைய போராட்டம், காந்திய தேசத்துக்கே காந்தீயத்தைப் போதித்த தியாகி திலீபனின் உன்னத தியாகம்.

அது போன்றே இந்தியப் படைகளின் மனதைப் பதற வைத்த - அன்னை பூபதியின் - மாமங்க உண்ணாவிரதம். ஒரு மாத காலம் உண்ணா நோன்பிருந்து தம் தாயக மண்ணுக்காய் உயிரை அர்ப்பணித்து நம் எல்லோருக்கும் தாயானார் அன்னை பூபதி.

இது போன்றே ஆயுதப் போராட்டத்திலும் எண்ணிப் பார்க்க முடியாத ஈகங்களையும், அளப்பெரும் தியாகங்களையும் புரிந்த நம் மத்தியில், இன்று போராட்டங்கள் கொச்சைப்படுத்தப்படுபவை போல முன்னெடுக்கப்படுகின்றவோ என்ற சந்தேகம் எழுந்திருக்கின்றது; உயர்ந்து நிற்கின்றது.

அஹிம்சைப் போராட்டங்களில் - காந்தீய மார்க்கம் இருக்க வேண்டும். அறநெறிப் பண்பியல்புகள் பொதிந்து கிடக்க வேண்டும். சத்தியப் போக்கு மிளிர வேண்டும். நேர்மை துலங்க வேண்டும்.

யாருக்கு எதிராக, எத்தகைய மார்க்கத்தில், எவ்வாறு போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்பதில் தெளிவு இருக்க வேண்டும்.

கூட்டத்தில் கூடி பிதற்றும் வேலையாக போராட்டங்கள் அமையக் கூடா. அடாவடித்தனங்கள், சண்டித்தனப் பேச்சுகள், ஏனையோரை மதியாமல் தூற்றிப் பேசுதல், அதட்டி அதிகாரத் தொனியில் மிரட்டல்களை விடுகின்றமை போன்றவற்றைச் செய்துகொண்டு அவற்றை அஹிம்சை வழிப் போராட்டங்கள் என்று கூறுவதில் அர்த்தமில்லை. வெறும் ஏமாற்றே.

செய்வதற்கு அதிகாரம் இல்லாத ஒருவரை அச்செயலைச் செய்யும்படி வற்புறுத்தி, அதட்டி, அதிகாரம் பண்ணி - மறியல் நடத்துவது ஒழுங்கான போராட்டமே அல்ல.

நியாயமான போராட்டங்கள் என்பதற்குச் சில வரை விலக்கணங்கள் உள்ளன. அவற்றைக் கோட்டை விட்டால் மக்கள் ஆதரவு இல்லாமல் போய்விடும். மக்கள் ஆதரவு இல்லாத வெகுஜனப் போராட்டங்கள் தோற்றுப் போய்விடும்.

போராட்டக் களத்தில் சூடாக நிற்போர் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள் இவை!

## இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வு பற்றி முஸ்லிம்களுக்குள் ஒரே நிலைப்பாடு தேவை

### மீள் குடியேற்ற இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் வலியுறுத்து



கொழும்பு, மே 11

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் முஸ்லிம்கள் தெளிவாக ஒரே நிலைப்பாட்டில் இருக்க வேண்டும் என்று தெரிவித்தார் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்.

அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் வடமாகாண சபை உறுப்பினர் அயூப் அஸ்மின், வடக்கும் கிழக்கும் இணைவது இயற்கையானது. முஸ்லிம்களுக்குத் தென்கிழக்கு அலகு வழங்குவதற்கு எதிராகத் தமிழர்கள் உறுதியாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கருத்தை வன்மையாகக் கண்டித்து நான் அண்மையில் காத்தான்குடியில் பேசியிருந்தேன். இதன்போது, வடக்கு, கிழக்கு இனப்பிரச்சினை தொடர்பில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தமது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்த வேண்டும் என்று நான் கோரிக்கை விடுத்திருந்தேன். அதற்கமைய மிகவிரைவிலேயே தமது நிலைப்பாட்டை அது தெளிவுடுத்தியிருந்தது.

வடக்கு, கிழக்கு இனப் பிரச்சினை தொடர்பில் அது வெளியிட்டிருந்த அறிக்கையில்-

'வடக்கும் கிழக்கும் பிரிந்துள்ள நிலையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அதிகாரப் பகிர்வு சகல மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் நீதியாக அமைய வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணி இவ்வாறு வெளியிட்ட அறிக்கையை அதன் செயலாளர் சகோதரர் நஜா முஹம்மத் எனக்கும் அனுப்பி வைத்திருந்தார். இந்தத் தெளிவுபடுத்தலுக்கு எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வடக்கு, கிழக்கு பிரச்சினை தொடர்பில் முஸ்லிம்கள் அனைவரும் தெளிவாக ஒரே நிலைப்பாட்டில் இருக்க வேண்டும். எங்களுக்கு மத்தியில் வித்தியாசமான கொள்கைகள், கருத்துக்கள், போக்குகள் இருக்குமாயின் அது எமது சமூகத்துக்கு எதிர்காலத்தில் பெரும் பாதிப்பையும் தாக்கத்தையும் ஏற்படுத்தும்.

அந்தவகையில், நல்லாட்சிக்கான தேசிய முன்னணியும் வடக்கும் கிழக்கும் பிரிந்துதான் இருக்க வேண்டும் என்று தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியது வரவேற்கத்தக்கது.- என்றுள்ளது.

## வெசாக் பண்டிகையை முன்னிட்டு யாழ்.சிறையில் நால்வர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 11

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறு குற்றம் புரிந்த கைதிகள் 4 பேர் பொது மன்னிப்பின் அடிப்படையில் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கைதிகள் யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.பி. பெரேராவால் விடுதலை செய்யப்பட்டனர்.

வருடாந்தம் வெசாக் மற்றும் புதுவருடம் உள்ளிட்ட பல்வேறு விசேட தினங்களில் ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அமைவாக சிறு குற்றம் புரிந்து நீதிமன்றங்களில் தண்டப் பணம் செலுத்த முடியாமல் தடுத்து வைக்கப்படும் கைதிகள் விடுதலை செய்யப்படுகின்றமை வழமை.

அந்தவகையில்,இந்தஆண்டு வெசாக் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் சிறைச்சாலைகளில்தடுத்துவைக்கப்பட்டுள்ள 575 கைதிகளை விடுதலை செய்ய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார் என்றும் சிறைச்சாலைகள்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, சிறு குற்றங்கள் இழைத்தவர்களே விடுவிக்கப்படவுள்ளனர் என்று சிறைச்சாலை ஆணையாளர் துஷார உபுல்தெனிய குறிப்பிட்டுள்ளார்.

அபராதத்தை செலுத்தத் தவறிய கைதிகள் மற்றும் 75 வயதுக்கு மேற்பட்ட, 10 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்த கைதிகளே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளனர் என்று அவர் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குற்றத்தடுப்பு நடவடிக்கைகளுக்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம்!

### பொலிஸ் மா அதிபர் வேண்டுகோள்

குற்றத்தடுப்பு நடவடிக்கைகளுக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்கள் தமது சுற்றுச்சூழலில் நிகழும் குற்றங்கள் தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்க வேண்டும்.

பொலிஸ் மா அதிபரின் பாதுகாப்பு அதிகாரியின் 071 8592020 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பொது மக்கள் தமது முறைப்பாட்டைப் பதிவு செய்ய முடியும். -என்றார்.

## ஏற்றுமதி இலக்காக 21 விவசாய வலயங்கள்

ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு 21 விவசாய வலயங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஆரம்ப கைத்தொழில் துறை அமைச்சர் தயாகமகே தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதன்படி முதலாவது வலயம் அனுராதபுரத்தில் அமைக்கப்படும். அபிவிருத்தி அடைந்த நாடுகளின் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொண்டு இந்தத் துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயத்துறை வருமானம் ஈட்டும் ஏற்றுமதித்துறையாக அபிவிருத்தி செய்யப்படும். இந்தத் துறையில் நூறு கோடி ரூபா அடிப்படை முதலீட்டைச் செய்யக் கூடிய தொழில் முயற்சியாளர்களை ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான முதலீடு வரை அதிகரிப்பதற்குத் தேவையான அறிவுரைகளும் உதவிகளும் வழங்கப்பட உள்ளன.- என்றார்.

விலங்கு விசர் நோயிலிருந்து எம்மைப் பாதுகாப்போம்!
இந்த நோய் நாய், பூனை, குரங்கு, கீரி, வௌவால், நரி போன்ற விலங்குகளின் கடியினால் ஏற்படலாம். காட்டு விலங்குகளை வீடுகளில் வளர்ப்பதைத் தவிர்ப்போம்!
நாய்களை பாதுகாப்பாக வளர்ப்போம்!
விலங்கு விசர் நோயை இல்லாது ஒழிப்போம்!

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை.
யாழ்.மாநகரசபை.

## நாளை

12.05.2017
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : அனுஷம் மு.இ. 7.46 வரை
திதி : துதியை முழுவதும்
சுபநேரம் : 5.54 – 7.24 வரை
இராகுகாலம் : 10.24 – 11.54 வரை

# இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல் இசை நாடக அரங்கு -2017



இரண்டாம் நாள் நிகழ்வுகள்

இடம்:
இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி கலையரங்கம்

நாள்:
இன்று (11.05.2017)
வியாழக்கிழமை

நேரம்: மாலை 4.30 மணி

தலைவர்
திரு.பா.பாலகணேசன்
(விரிவுரையாளர் – தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்)

பிரதம விருந்தினர்
பேராசிரியர் R.விக்னேஸ்வரன்
(உபவேந்தர், யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்)

சித்தார்த்தன், பிரதித்தன் குழுவினர் வழங்கும்
மங்கல இசை

நாதஸ்வரம்
திரு.பி.சித்தார்த்தன்
திரு.பி.பிரதித்தன்

தவில்
திரு.சு.விபூஷணன்
மானிப்பாய் அமரன்

மங்கல விளக்கேற்றல்

திருமுறை ஓதுதல் : செல்வன் கண்ணதாஸ் தமிழ் வேந்தன்
(ஏழிசை மிருதங்க நர்த்தனாலய மன்ற மாணவன்)

ஆசியுரை : அருட்திரு. ஜெரோ செல்வநாயகம்
(அதிபர் – சென்பற்றிஸ் கல்லூரி, நிர்வாக இயக்குநர், திருமறைக் கலாமன்றம்)

வாழ்த்துரை : 'இசைவாணர்' எம்.கண்ணன்
(மூத்த இசையமைப்பாளர்)

சைவ வித்தியா விருத்திச் சங்க "சைவ சிறுவர் இல்ல" மாணவர்கள் வழங்கும்
கோலாட்டம்



நட்டுவாங்கம் : திருமதி யாழினி ரதீஸ்வரன்
பாட்டு : திருமதி வத்சலா கருணாகரன்
வயலின் : திருமதி இந்துமதி தயாபரன்
மிருதங்கம் : திரு. T.சிவகுமார்

கவிதை மழை
அரியாலையூர் செல்வி மிஷாந்தி செல்வராஜா வழங்கும்
"முத்தமிழ் இனிமை"

இசை விருந்து



பாட்டு : திரு. N.பரந்தாமன்
திரு. S.சிவமைந்தன்
வயலின் : திரு. அ.ஜெயராமன்
மிருதங்கம் : திரு. நல்லை க.கண்ணதாஸ்
கெஞ்சிரா : திரு.ஞா.வசந்த்
முகர்சிங் : திரு.சதீஸ்குமார்

" தொன்மம் " கலைக்குழுவினர் வழங்கும் பறை இசை நடனம்

"நிருத்திய கீதாலயம்" மாணவிகள் வழங்கும் நிருத்தியாஞ்சலி



நட்டுவாங்கம் : திருமதி அகல்யா ராஜபாரதி
பாட்டு : திருமதி சுகந்தி இரட்ணேஸ்வரன்
வயலின் : திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம் : திரு. S.துரைராஜா

இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியினர் வழங்கும்
மாமிக்கு வாச்ச மருமகள் (நகைச்சுவை நாடகம்)

கலைஞர்கள் கௌரவிப்பு
பிரதம விருந்தினர் உரை

வசந்தம் வில்லிசைக் குழுவினர் வழங்கும்
"நாவலர் இன்று இருந்திருந்தால்..."



வில்லு : திரு. S.K.N.தவராசா
பக்கப்பாட்டு : திரு.K.சுரேஸ்மோகன்
ஆர்மோனியம் : திரு.S.சண்முகலிங்கம்
தபேலா : திரு. S.நிமலன்
கடம் : திரு.K.றஜீவன்

நன்றியுரை

அனுசரணை:
புதிய நதியா நகை மாடம்
73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 021 222 3261


# அமைச்சரவை இணைப் பேச்சாளராக தயாசிறி ஜயசேகரவை நியமிக்க முடிவு!



கொழும்பு, மே 11

அமைச்சரவை இணைப் பேச்சாளராக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகராவை நியமிக்கக் கட்சியின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

முன்னதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பாவின் பெயர் முன்மொழியப்பட்டிருந்த போதும், அவர் அந்தப் பதவியை நிராகரித்துள்ளார் என்று அந்தக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது அமைச்சரவை இணைப் பேச்சாளர்களாக அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, கயந்த கருணாதில ஆகியோர் கடமையாற்றி வருகின்ற நிலையில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் அமைச்சர் தயாசிறி ஜயசேகரா நியமிக்கப்படவுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் கூடிய அமைச்சரவை கூட்டத்தின் போதும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் ஓர் அமைச்சரவை பேச்சாளர் நியமிக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மற்றும் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் ஆகியோரின் அனுமதி கிடைக்கப்பட்டதன் பின்னர் தயாசிறி ஜயசேகராவின் பெயர் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் முன்மொழியப்படும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# நிரந்தரக் குடியுரிமைபெற்றோர் அந்த நாட்டுப் பிரஜைகளே!

## கனடா உச்ச நீதிமன்றம் அறிவித்தது

கனடாவில் அகதி அந்தஸ்த்துப் பெற்று நிரந்தர குடியுரிமை பெற்ற அனைவரையும் கனேடிய பிரஜைகளாகக் கருதவேண்டும் என அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த நஸ்ரின் அஹமட் மொஹமட் நிலாம் (வயது-36) என்பவர் 2008 ஆம் ஆண்டு கனடா சென்று, 2011 ஆம் ஆண்டு அந்த நாட்டின் குடியுரிமையை பெற்றுள்ளார்.

இதேவேளை, அவர் 2010 ஆம் ஆண்டிலும், 2011 ஆம் ஆண்டிலும் இலங்கைக்கு வந்து சென்றுள்ளார்.

இரண்டு தடவைகள் இலங்கை சென்று பாதுகாப்பாக நாடு திருப்பியமையால், அவருக்கு எந்தவித அச்சுறுத்தலும் இலங்கையில் இல்லை என்ற நிலைப்பாட்டை கனேடிய குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

இதனடிப்படையில் கடந்த 2012 ஆம் ஆண்டு கனடாவின் முன்னாள் அரசு ஏற்படுத்திய அகதிகள் சட்டத் திருத்தங்களின் அடிப்படையில், அவரது குடியுரிமையைப் பறித்து நாடு கடத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பான வழக்கு அந்த நாட்டு உச்ச நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகிறது. நிரந்தரக் குடியுரிமை பெறுகின்ற அகதிகள், கனடாவின் பிரஜைகளுக்கு ஒப்பாகவே நடத்தப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்குத் தொடர்பான மீளாய்வை உச்ச நீதிமன்றம் எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது என்று கனேடிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# உயர்தரத் தமிழ் நூல் வெளியீடு

தென்மராட்சி, மே 11

தமிழ் ஆசிரியர் வீ.வீ. சாந்தன் எழுதிய உயர்தர தமிழ் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மீசாலை வீர சிங்கம் மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்க உப தலைவரும், மருதங் கேணி பிரதேச செய லாளருமான க.கன கேஸ்வரன் தலைமை யில் நிகழ்வு இடம் பெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தின ராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறித ரன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தி னர்களாகத் தென்ம ராட்சி கல்வி வலய தமிழ்ப் பாட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க.சிறிதரன், ஓய்வுபெற்ற அதிபர் க.அருந்தவபாலன், கோப்பாய் ஆசிரிய கலா சாலை பிரதி அதி பர் ச.லலீசன் ஆகி யோரும் கலந்து கொள் வர். (ச.

# கீதா குமாரசிங்கவின் வெற்றிடத்துக்கு புதிய நியமனம் தொடர்பில் முடிவில்லை

## தெரிவிக்கிறார் தேர்தல் ஆணைக்குழுத் தலைவர்

கொழும்பு, மே 11

வெற்றிடமாகியுள்ள கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை பதவிக்கு மற்றுமொருவரை நியமிப்பது தொடர்பில் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களின் கருத்துக்களை கோரிய பின்னர் தீர்மானிக்கப்படும் என்று தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

பதவி பறிக்கப்பட்ட கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமைக்கு, அவருக்கு அடுத்த இடத்தில் உள்ளவரை நியமிப்பது தொடர்பில் தீர்மானமொன்று மேற்கொள்ளப்படவில்லை என்று தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இரட்டைக் குடியுரிமை காரணமாக கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்டது.

இதையடுத்து, அந்த வெற்றிடத்தை பியசேன கமகே நிரப்பவிருந்தார் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வடக்கு, கிழக்கு மாகாண இணைப்புத் தொடர்பில்

# முஸ்லிம் மக்களுடைய அச்சத்தை தமிழ்த் தலைமை போக்க வேண்டும்!

### மு.கா தேசிய கொள்கை பரப்பு செயலாளர் தெரிவிப்பு

காத்தான்குடி,மே 11

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்புத் தொடர்பில் முஸ்லிம்களின் அச்சத்தை தமிழ்த் தலைமைகள் போக்க வேண்டும்.

-இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளர் யு.எல்.எம்.என்.முபீன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு காத்தான்குடியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸின் காத்தான்குடி மத்திய குழு உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்புத் தொடர்பில் அதிகம் பேசி வருகின்ற தமிழ்த் தரப்பினர், இந்த மாகாணங்களின் இணைப்புக்கு முஸ்லிம்கள் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுகின்றனர்.

அம்பாறையில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தினக் கூட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவதே சிறுபான்மைச் சமூகத்துக்குப் பாதுகாப்பு என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருந்தார். ஆனால், இந்த இரண்டு மாகாணங்களும் இணைக்கப்படுகின்றமையால் தங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்று முஸ்லிம்கள் அச்சமடைந்துள்ளனர். இதற்குக் கடந்தகால கசப்பான அனுபவங்களே காரணமாகும்.

தமிழர்கள் பெரும்பான்மையாக ஆட்சி அல்லது நிர்வாகம் செய்த பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்கள் முற்றாக ஒதுக்கப்பட்டமை, அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்டமை போன்றமை தொடர்பில் தற்போதும் அவர்கள் பேசி வருகின்றனர்.

வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண சபை இயங்கிய நிர்வாக காலப்பகுதியில் அபிவிருத்தி, வேலைவாய்ப்பு மற்றும் காணி உரிமை தொடர்பில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த முஸ்லிம்கள் முற்றாக ஒதுக்கப்பட்டனர்.

மீண்டும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படும் போது, கிழக்கு மாகாணத்தில் ஏனைய இனங்களுடன் ஒப்பிடுகையில் சம இனப் பரம்பல் அல்லது சற்றுக்கூடிய நிலையில் காணப்படும் முஸ்லிம்கள், திடீரெனச் சிறுபான்மையாக மாறும் நிலைமையே ஏற்படும். இந்த விடயமே முஸ்லிம்களை அச்சமடையச் செய்துள்ளது.

இந்த மாகாணங்கள் இணைக்கப்படுகின்றபோது, தமிழர்களின் பெரும்பான்மைப் பலம் அதிகரிக்கும். அத்துடன், முஸ்லிம்கள் சிறுபான்மையாகி விடும் நிலைமை ஏற்படும். எனவே, முஸ்லிம்களின் அச்சத்தைப் போக்கும் கடப்பாடு தமிழ்த் தலைமைகளுக்கு உண்டு.- என்றார். (ச)

## கல்லடியில் சடலம் மீட்பு!

கல்லடி,மே 11

காத்தான்குடி கல்லடிக்கடற்கரையோரத்தில் பெண்ணொருவரின் சடலம் நேற்றுப் புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

75 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளைக் காத்தான்குடிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)

## மொறவெவ வைத்தியசாலையைச் சுற்றி மின்வேலி அமைக்குமாறு வேண்டுகோள்!

திருகோணமலை,மே 11

திருகோணமலை மொறவெவ வைத்தியசாலையைச் சுற்றி மின் வேலி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அப்பிரதேச செயலாளர் பாத்திய விஜயந்த வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மொறவெவ பிரதேச அபிவிருத்தி தொடர்பான கூட்டம் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.-

கடந்த வருடம் ஜூன் மாதம் 13 ஆம் திகதி, மொறவெவப் பிரதேச வைத்தியசாலை காட்டு யானையின் தாக்குதல் காரணமாகச் சேதமடைந்துள்ளது. இந்த நிலையில், அப்பகுதி மக்கள் மேற்படி வைத்தியசாலைக்கு மின் வேலியை அமைக்குமாறும், வைத்தியசாலையின்குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறும் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது, இந்த வருடம் ஜூன் மாதத்துக்கு முன்னர், மின் வேலி அமைத்துத் தரப்படும் என்று பிரதேச செயலாளர் மொற வெவப் பிரதேச மக்களுக்கு வாக்குறுதி அளித்தார்.

இந்த மின் வேலி அமைப்பது தொடர்பில் வனப்பாதுகாப்புத் திணைக்களத்தால், மஹதிவுல்வெவ பிரதேச சங்கம் ஒன்றுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டும் இதற்குரிய வேலை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

## மட்டக்களப்பில் உஷ்ணத்தால் கல்விச் சுற்றுலா நிறுத்தம்!

மட்டக்களப்பு,மே 11

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கும் பாடசாலைகள் எவையும் கல்விச் சுற்றுலாவுக்குச் செல்வது தற்காலிகமாகத் தடுக்கப்பட்டுள்ளது.

இப்போதைய மிகக் கடுமையான, சுட்டெரிக்கும் வெய்யில் கருதி, இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என மட்டக்களப்பு மாவட்ட மத்திய பிரதேசக் கல்வி இயக்குநர் ஏ.எஸ்.இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

மேற்படி ஏற்பாடு குறித்து சகல பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என பிரதேசக்கல்வி இயக்குநர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

2017 ஆம் ஆண்டின், செயற்பாடுகள் குறித்த கல்வி அட்டவணையின் பிரகாரம், கல்விச் சுற்றுலா இரண்டாவது தவணையின் போது நடைபெறுவது வழமையாகும். (அ)

## கிழக்கு மாகாண அமைச்சுகளில் 2,765 பதவி வெற்றிடங்கள்!

கிழக்கு மாகாண அமைச்சுகளில் 2 ஆயிரத்து 765 பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன என கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-




கிழக்கு மாகாண முதலமைச்சில் 331 வெற்றிடங்களும், சுகாதார அமைச்சில் 341 வெற்றிடங்களும், விவசாய அமைச்சில் 558 வெற்றிடங்களும், கல்வி அமைச்சில் ஆயிரத்து 535 வெற்றிடங்களும் காணப்படுகின்றன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடியாக அனுமதி வழங்குமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

இது தொடர்பான ஆவணங்கள் கடந்த மார்ச் மாதம் அரசின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்த வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட்டால், நிர்வாகச் செயற்பாடுகளைத் திறம்பட நடத்துவதற்கு உதவியாக இருக்கும். -என்றார். (ச)

## திடீரென மயங்கி விழுந்து உவெஸ்லி மாணவி சாவு!

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவி ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்த நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் உயிரிழந்துள்ளார்.



நற்பிட்டிமுனைப் பிள்ளையார் கோவில் வீதியைச் சேர்ந்த புவனேந்திரன் கீர்த்தனா (வயது-16) என்ற மாணவியே உயிரிழந்தவர் ஆவார்.

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி பயிலும் இந்த மாணவி, இம்முறை பரீட்சைக்குத் தோற்றவிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

க.பொ.த. சாதாரண தரத்தில் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான பிரத்தியேக மேலதிக வகுப்புக்கள் பாடசாலையில் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், கடந்த திங்கட்கிழமை மேலதிக வகுப்பு இடம்பெற்றது. மேற்படி வகுப்பு முடிவடைந்து 2.20 மணியளவில் மாணவர்கள் வீடு செல்வதற்குத் தயாராகிக் கொண்டிருந்த நிலையிலேயே, பிரஸ்தாப மாணவி மயங்கி விழுந்துள்ளார். இதனையடுத்து, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார். (ச)

## மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தில் உடற்கல்வி ஆசிரியர்கள் பற்றாக்குறை!

மட்டக்களப்பு,மே 11

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் உடற்கல்விப் பாடத்துக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது என அவ்வலயக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இங்கு ஆசிரியர்களின் தேவை மிகவும் அவசியமாக உள்ளது. இதனை நிவர்த்தி செய்வதற்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலுள்ள எந்தவொரு கோட்டத்திலும் 400 மீற்றர் அளவுள்ள விளையாட்டு மைதானம் இல்லை.

இந்த வலயத்தில் போதியளவான விளையாட்டு உபகரணங்கள் இன்மையால், ஏனைய வலயங்களிடமிருந்து விளையாட்டு உபகரணங்களைக் கடனாகப் பெற்று போட்டிகளை நடத்துகின்றோம்.

எமது வலயத்திலுள்ள மாணவர்கள் விளையாட்டில் திறமையானவர்கள். அவர்களுக்கான களத்தை அமைத்துக் கொடுக்க வேண்டியது கல்வி அமைச்சின் கடமை ஆகும்.-என்றார். (ச)

# சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மாற்றம்!



**தெரிவிக்கிறார் அமைச்சர் மஹிந்த அமரவீர**

கொழும்பு, மே 11

அரசியல் ரீதியில் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும், அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாக அமைச்சரவைப் பேச்சாளர் ஒருவரை நியமிக்க கட்சி தீர்மானம் எடுத்துள்ளது.

ஆனாலும், சில அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பில் கருத்து, வெளிப்படுத்தும் போது ஏற்படுகின்ற சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்வதற்காகவே இந்த மாற்றத்தை ஏற்படுத்த தீர்மானித்துள்ளோம்.

இதனை வைத்துக் கொண்டு இது அமைச்சர் ராஜிதவுக்கு எதிரான முயற்சி என்று நினைக்கக் கூடாது. அவருக்கு எதிரான எந்த முயற்சியும் அல்ல. ஊடகவியலாளர் சந்திப்புக்களின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை மக்கள் மத்தியில் சரியாகக் கொண்டு செல்வதற்காகவே இந்த மாற்றத்தை கட்சி முன்னெடுக்கவுள்ளது.

ராஜித சேனாரத்ன அமைச்சரவைப் பேச்சாளர் என்ற வகையில் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிப்பதில் எவ்வித பிரச்சினையும் இல்லை.- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தலைவராகக் கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இந்த விவகாரம் அரசியல் தரப்பில் பெரிதும் பேசப்படும் விடயமாக மாறியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# கீதாவின் மேன்முறையீட்டு மனு; உயர் நீதிமன்றில் நாளை விவாதம்!



கொழும்பு, மே 11

மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக கீதா குமாரசிங்கவின் மனு நாளை உயர் நீதிமன்றத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளது.

சினிமா நடிகை கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ரத்து செய்து கடந்த 03 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக, கீதா குமாரசிங்க உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

உயர் நீதிமன்றத்தில் தான் செய்துள்ள மனுவின் தீர்ப்பை அறிவிக்கும் வரையில், தனக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பை செயற்படுத்தாது இடைநிறுத்தி வைப்பதற்கு இடைக்காலத் தடை உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு நேற்றுமுன்தினம் முன்வைத்த மனுவில் அவர் உயர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

இந்த மனு தொடர்பான விசாரணையை நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறும் என உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் அறிவித்தல் விடுத்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

இருப்பினும், இவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இரத்து செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைய, நேற்று முன்தினம் நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்தால், தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் பொருளாதாரம் மிகச் சிறிய வளர்ச்சியையே எட்டும்!

*ஐ.நா. பொருளாதார ஆணைக்குழு தெரிவிப்பு*




கொழும்பு, மே 11

இலங்கையின் பொருளாதாரம் இந்த ஆண்டில் மிகச் சிறிய வளர்ச்சியையே எட்டும் என்று ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான ஐ.நா. பொருளாதார சமூக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆசிய பசுபிக்கிற்கான ஐ.நா. பொருளாதார சமூக ஆணைக் குழுவின் ஆய்வு அறிக்கை -2017 நேற்று முன்தினம் கொழும்பில் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் 2016 ஆம் ஆண்டு 4.4 வீதமாக இருந்த இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, இந்த ஆண்டில் 4.8 வீதமாக அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டில், இது 4.9 வீதமாக இருக்கும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது,

இலங்கை மத்திய வழங்கி இந்த ஆண்டில், 5 வீத பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்று கணித்திருந்த போதிலும், அதனை விடச் சற்றுக் குறைவான வளர்ச்சியே ஏற்படும் என்று ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான ஐ.நா. பொருளாதார சமூக ஆணைக் குழு கணித்துள்ளது.

# மகளின் திருமண வைபவம் காரணமாகவே முதலமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்கவில்லை!

**தென் மாகாண முதலமைச்சர் சான் விஜயலால் டி சில்வா கூறுகிறார்**



கொழும்பு, மே 11

மகளின் திருமண வைபவம் காரணமாகவே முதலமைச்சர்கள் மாநாட்டில் தன்னால் பங்கேற்க முடியவில்லை என தென் மாகாண முதலமைச்சர் சான் விஜயலால் டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஹபரண பிரதேசத்தில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் ஏன் பங்கேற்கவில்லை என ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எனது மூத்த மகளின் திருமண வைபவம் காரணமாகவே என்னால் மாநாட்டில் பங்கேற்க முடியவில்லை.

தென் மாகாண முதலமைச்சராகப் பதவி ஏற்றுக்கொண்ட நாள் முதல் நடைபெற்ற அனைத்து மாநாடுகளிலும் பங்கேற்றிருக்கின்றேன்.

இந்தத் தடவையே என்னால் பங்கேற்க முடியாமல் போயிற்று. மகளின் திருமண நிகழ்வு மாநாடு நடைபெற்ற தினத்துக்கு மறுநாள் நடைபெற்றது.

திருமண நிகழ்வின் முக்கிய பொறுப்புக்கள் பலவற்றை நான் மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஒன்பது முதலமைச்சர்களும் ஒன்றாக சந்திக்க கிடைக்கும் சந்தர்ப்பம் மிகவும் அரிதானது, எனக்கு அந்த சந்தர்ப்பம் கிடைக்காமை வருத்தமளிக்கின்றது.

மே தினக் கூட்டத்தை நடத்துவது தொடர்பில் பல்வேறு முக்கிய பொறுப்புக்கள் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட காரணத்தால், மகளின் திருமண நிகழ்வு ஏற்பாடுகளை காலம் தாழ்த்தியே ஆரம்பிக்க நேரிட்டது.

இதனாலேயே என்னால் மாநாட்டில் பங்கேற்க முடியவில்லை. எனினும், மாநாட்டில் எடுக்கப்பட்ட அனைத்துத் தீர்மானங்களுக்கும் கட்டுப்பட்டு நான் நடவடிக்கை எடுப்பேன்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்!



கொழும்பு, மே 11

இலங்கையராக இல்லாமல், சிங்கப்பூரைச் சேர்ந்த அர்ஜுன் மகேந்திரன் இலங்கையின் மத்திய வங்கியில் எவ்வாறு ஆளுநர் பதவியை வகித்தார் என்பது தொடர்பில் தெளிவைப் பெற்றுக்கொள்ள உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

மஹிந்த தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன இந்த மனுவை தாக்கல் செய்யவுள்ளார்.

மஹிந்த தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க, சுவிற்ஸர்லாந்தின் பிரஜாவுரிமையைக்கொண்டுள்ளமையால், நாடாளுமன்ற உறுப்புரிமையை இழப்பதாக நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை அடுத்தே பந்துல தமது மனுவை தாக்கல் செய்யவுள்ளார்.

அர்ஜுன் மகேந்திரன், இலங்கையின் அரசமைப்பின்படி சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறானால் அவர் எவ்வாறு மத்திய வங்கியின் ஆளுநராகப் பதவிவகிக்க முடியும் என்றும் 100 ரூபா, 5 ஆயிரம் ரூபா நோட்டுக்களில் அவர் எவ்வாறு கையொப்பமிட்டிருக்க முடியும் என்றும் பந்துல கேள்வி எழுப்பியுள்ளார்.

# உலக இளம் விஞ்ஞானிகள் மாநாட்டில் சாதனை; இலங்கை மாணவனை ஜனாதிபதி சந்தித்தார்!



கொழும்பு, மே 11

உலக இளம் விஞ்ஞானிகள் மாநாட்டில் இலங்கைக்கு வெள்ளிப் பதக்கத்தை வென்ற இலங்கை மாணவனை ஜனாதிபதி மைத்திரி சந்தித்துள்ளார்.

கொழும்பு நாளந்தா கல்லூரியில் 10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர் ரகிந்து ரன்திவி விக்ரமரத்ன இந்த சாதனையைப் படைத்துள்ளார்.

40 நாடுகள் பங்குபற்றிய உலக இளம் விஞ்ஞானிகள் மாநாட்டில் முதற்தடவையாக ரகிந்து ரன்திவி விக்ரமரத்ன வெள்ளிப் பதக்கத்தை இலங்கைக்கு ஈட்டிக் கொடுத்துள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் முற்பகல் ஜனாதிபதிசெயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துள்ளார்.

இதன்போது மாணவனின் திறமையைப் பாராட்டி கௌரவிப்பு வழங்கிய ஜனாதிபதி, அவரது எதிர்காலத்துக்காகத் தனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

உலக இளம் விஞ்ஞானிகள் மாநாடு கடந்த ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதியிலிருந்து 21 ஆம் திகதி வரை ஜேர்மன் ஸ்டுட்காட் நகரில் நடைபெற்றது.

ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மன் போன்ற முக்கிய நாடுகளிலிருந்து 300 பேர் பங்குபற்றியிருந்தனர்.

மாணவர் ரவிந்து ரன்திவி சுற்றாடல் விஞ்ஞான பிரிவில் தயாரித்த சுற்றாடல் நிலைமைகளால் மரங்களிலுள்ள மகரந்தங்களில் படியும் மாசடைந்த வளியால் ஆஸ்த்மா நோய் மேலும் தீவிரமடைவது தொடர்பில் மேற்கொண்ட ஆராய்ச்சிக்காக இந்த வெள்ளிப் பதக்கம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் ஏற்பாட்டில் வேல்ட் விஷன் அனுசரணையுடன் சங்கானைக் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட ஆரம்பப் பிரிவு மாணவர்களின் மெல்லக் கற்றலை மேம்படுத்தும் வகையில் பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குவது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் சங்கானை திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் இடம்பெற்றது. சிவன் அறக் கட்டளை நிறுவுநர் வேலாயுதம் கணேஸ்வரன் அங்கு உரையாற்றுகின்றார். (எ)

# பல்வேறு இன அழிப்புக்கு முகம் கொடுத்துள்ள மலையக மக்கள்

## மலையக சமூக ஆய்வு மையம் கவலை



மலையக மக்கள் பல்வேறு விதமான இன அழிப்புக்கு முகம் கொடுத்துள்ளனர். தாங்கள் மலையகத்தில் பிறந்தவர்கள் என்று கூறுவதற்குக் கூட வெட்கப்படுகின்றனர் என்று மலையக சமூக ஆய்வு மையம் கவலை வெளியிட்டுள்ளது.

மேலும், மலையக மக்களுக்கு இந்தியப் பிரதமரின் வருகை அரசியல் அங்கீகாரம் என்றே தாம் கருதுகின்றனர் என மலையக சமூக ஆய்வு மையத்தின் ஏற்பாடாளர் அருட்தந்தை மாரிமுத்து சத்திவேல் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் அவர்களுக்கான தீர்வு என்ன என்பது தொடர்பிலும் இந்தியப் பிரதமரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மனு ஒன்று நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் ஊடாக மனுவைக் கையளிப்பதற்காக மலையக சமூக ஆய்வு மையத்தின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை சத்திவேல் தலைமையிலான மலையக சிவில் செயற்பாட்டாளர்கள் நேற்றுமுன்தினம் இந்தியத் தூதரகத்துக்குச் சென்றிருந்தனர்.

இதன்போதே அவர் மேற்படி கோரிக்கை விடுத்தார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் வாழுகின்ற தேசிய இனம் என்ற அங்கீகாரத்தை மலையக மக்களுக்குக் கொடுக்கின்ற பாதையைத் திறந்து வைக்க வேண்டும்.

மலையக மக்கள் பல்வேறு விதமான இன அழிப்புக்கு முகம் கொடுத்துள்ளனர். தாங்கள் மலையகத்தில் பிறந்தவர்கள் என்று கூறுவதற்குக் கூட வெட்கப்பட்டுள்ளனர்.

200 வருட கால வரலாற்றைக் கொண்ட ஒடுக்கப்பட்ட மலையக மக்கள், தற்பொழுது, வாழ்வுரிமை, தொழிலுரிமை, நிலவுரிமையை அனைத்தையும் இழக்க வேண்டிய காலகட்டத்தில் வாழ்ந்து வருகின்றனர்.-என்றார்.

# இரத்தினபுரியில் வாகன விபத்து; இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!

இரத்தினபுரி, குட்சேட் வீதியில் செலான் சந்தி பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று பஸ் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோது பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கல்லேல்ல, இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவரே உயிரிழந்தவராவார்.

விபத்து தொடர்பாக பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளமையுடன், இரத்தினபுரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# இத்தாலியில் சிக்கிய போதை மாத்திரைகள் இலங்கையிலிருந்து அனுப்பப்பட்டவையா?

## விசாரணைகள் தீவிரம்

இலங்கையிலிருந்து அனுப்பப்பட்டவையா என சந்தேகிக்கப்படும் பெரியளவான போதை மாத்திரைகள் இத்தாலியில் கைப்பற்றப் பட்டுள்ளன என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

37.5 தொன் எடை கொண்ட பெரிய அளவான போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்ட நிலையில், அவற்றின் பெறுமதி 81 கோடியே 96 லட்சம் டொலர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அந்தப் போதை மாத்திரைகள், ஐ.எஸ். தீவிரவாதிகள் தங் களின் ஜிஹாத் போராளிகளுக்கு மூர்க்கத்தனத்தை அதிகரிப்பதற்காக பயன்படுத்துகின்றனர் என்று இத்தாலி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அந்தப்போதை மாத்திரைகள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து 'ஷம்போ' போத்தல்கள் என்ற பெயரில் மறைத்து இத்தாலிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

இதுதொடர்பில் இத்தாலியில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தினசரி ராசி பலன் 11.05.2017

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 28ஆம் நாள் பிரதமைத்திதி பி.இ. 05.28 மணி வரை. பின்னர் துவிதியை. நட்சத்திரம்: விசாகம் மாலை 05.19 மணி வரை. பின்னர் அனுஷம். சித்தயோகம் முழுவதும். ராகுகாலம்: பகல் 01.10 மணி முதல் 03.14 மணி வரை. சுபநேரம்: காலை 07.22 மணி முதல் 08.52 மணி வரை. திவசம் செய்யவேண்டிய திதி சித்திரை மாத தேய்பிறை பிரதமை. பிறந்த நட்சத்திர வழிபாடு. விசாகம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** விருத்தியான நாள். பொருளாதாரம் விருத்தி அடையும். வியாபாரம் நன்கு அபிவிருத்தியடையும். உத்தியோகத்தில் முன்னேற்றம் கிடைக்கும்.

**ரிஷபம்:** இன்பமான நாள். நினைத்த காரியம் துல்லியமாய் நிறைவேறும். செய்யும்தொழில் முன்னேற்றமடையும்.

**மிதுனம்:** யோகமான நாள். அரச வழியில் வீடு, காணி என்பன சிலருக்குக் கிடைக்கும்.

**கடகம்:** கவலையான நாள். செலவுகள் அதிகரிப்பால் தடுமாற்றம் உண்டாகும். வியாபாரத்தில் பொருள்கள் தேங்கிக்கிடக்கும்.

**சிம்மம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவுக்கு மீறியசெலவுகள் உண்டாகும். தொழிலில் பிரயாசை, அலைச்சல்கள் அதிகமாகும்.

**கன்னி:** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். வியாபாரம் மேன்மை அடையும்.

**துலாம்:** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். சுயதொழிலில் போதிய ஆதாயம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** அலைச்சல் மிகுந்த நாள். கடன்வாங்க அலைவார்கள். வியாபாரிகள் வெளிநாட்டு ஒப்பந்தங்களைத் தேடித் திரிவார்கள்.

**தனுசு:** யோகமான நாள். பணம் எல்லா வழிகளாலும் வந்துசேரும். வெளிநாடு செல்லும் யோகம் சிலருக்கு உண்டு.

**மகரம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. செலவுகள் அளவுக்கதிகமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவுகள் உண்டாகும்.

**கும்பம்:** இன்பமான நாள். பணப்புழக்கம் தாராளமாகஇருக்கும். குடும்பத்தில் அன்னியோன்னியம் பெருகும். ஆடை, ஆபரணம் வந்து சேரும்.

**மீனம்:** சலனம் மிகுந்த நாள். மனதில் ஒருவித கவலை ஏற்படும். பணவரவு குறையும். மாணவர்கள் கல்வியில் குழப்பம் உண்டாகும்.

சந்திராட்டமநாள்: பூரட்டாதி 4 ஆம் கால், உத்தரட்டாதி, ரேவதி, அச்சுவினி, பரணி, கார்த்திகை மாதத்தில் பிறந்தோர் இன்று சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# பலஸ்தீன அரசியல் கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவளியுங்கள்!

## மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் வேண்டுகோள்

கொழும்பு, மே 11

இஸ்ரேல் சிறைச்சாலைகளில் வாடுகின்ற பலஸ்தீன அரசியல்கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லாஹ் நேற்றுமுன்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



பலஸ்தீன சிறைக்கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவாக இலங்கையிலுள்ள பலஸ்தீன தூதரகத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கையெழுத்து மனுவில் கையொப்பமிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முஸ்லிம்களின் புனித பூமியான பலஸ்தீனத்தில் அத்துமீறி குடியேற்றங்களை நிறுவி வருகின்ற இஸ்ரேல், ஏராளமான பலஸ்தீனியர்களை சிறைப்படுத்தி வைத்துள்ளது. பல ஆண்டுகளாக அரசியல் கைதிகளாக சிறையில் வாடுகின்ற அவர்கள் தற்போது உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கு ஆதரவாக இலங்கை பலஸ்தீன தூதரகம் கையெழுத்து மனு ஒன்றைத் தயாரித்து வருகின்றது. இதில், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், சமூகச்செயற்பாட்டாளர்கள், புத்திஜீவிகள் என ஏராளமானவர்கள் கையெழுத்திட்டு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த மனுவில் எதிர்வரும் 17ஆம் திகதி வரை கையொப்பமிட முடியும். எனவே, இன, மத பேதங்களை மறந்து அந்த மனுவில் அனைவரும் கையெழுத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன். -என்றார்.

# இலவு காக்கும் நிலையில் தமிழ் மக்கள்...?

செல்வரட்ணம் சிறிதரன்

நல்லாட்சிக்கான அரசின் கீழ் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததை அடுத்து, நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்தமற்ற சமாதான் நிலைமை, முழு நாட்டின் ஐக்கியத்துக்கும் நிரந்தரமான சமாதான நிலைமைக்கும் வழி சமைக்கும் என்று பலராலும் எதிர்பார்க்கப்பட்டது.

அந்த எதிர்பார்ப்பு இப்போது சந்தேகத்துக்கு உரியதாக மாறியிருக்கின்றது. இது துரதிர்ஷ்ட வசமானது. அது மட்டுமல்ல. இந்த நிலைமையானது, இந்த நாட்டின் அரசியல் நிலைமைகள் ஸ்திரமற்ற ஒரு தன்மையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பதற்கான அடையாளமாகவும் திகழ்கின்றது. அத்துடன், தமிழ் மக்களின் அரசியல் நிலைமைகளும் ஒரு முக்கியமான கால கட்டத்தை அடைந்திருப்பதையும் அடையாளப்படுத்தியிருக்கின்றது. இந்த அரசியல் கால கட்டம் என்பது, தமிழ் மக்களுடைய அரசியலை வலுவானதொரு பாதையில் முன்னோக்கி நகர்த்திச் செல்லப் போகின்றதா அல்லது அதாள பாதாளத்தில் வீழ்த்தி விடப் போகின்றதா என்பதை நிர்ணயிக்கும் ஒரு சந்தர்ப்பமாகவும் உருமாறிக் கொண்டிருக்கின்றது.

இந்த ஆட்சியைப் பதவிக்குக் கொண்டு வருவதற்காக முதலில் திரை மறைவில் நின்று முழு மூச்சுடன் செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட பலரும் இந்த ஆட்சியின் கீழ் 2016 ஆம் ஆண்டு அரசியல் தீர்வு காணப்படும் என்று உறுதியாக நம்பினர். கூட்டமைப்பின் ஏனைய கட்சியைச் சேர்ந்தவர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தமிழ் மக்களையும் நம்பிக்கை வைக்குமாறு அவர் கோரி வந்தார்.

இந்த நாட்டின் இரு பெரும் சிங்கள அரசியல் கட்சிகளாகிய ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் இணைந்து அமைத்த தேசிய அரசின் கீழ் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது என்பது, இலங்கையின் அரசியல் வரலாற்றில் கிடைத்தற்கரியதொரு சந்தர்ப்பமாகவும் ஆரம்பத்தில் வர்ணிக்கப்பட்டது.

இவ்வாறு குறிப்பிடப்பட்டது மிகவும் பொருத்தமானது. இதில் சந்தேகப்படுவதற்கு எதுவுமில்லை. காரணம் கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சி ஆளும் கட்சியாக அதிகாரத்தில் இருக்கும் போது இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காண்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, எதிர்க்கட்சியாக இருந்த சுதந்திரக் கட்சி அதனைவலுவாக எதிர்த்துச் செயற்பட்டது. அதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் முயற்சிகள் பயனற்றுப் போயின.

அதேபோன்று சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருந்த போது, அரசியல் தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசிய கட்சி [illegible] எதிர்த்து அந்த முயற்சியைத் தொடரவிடாமல் தடைபோட்டிருந்தது.

இவ்வாறு இந்த இரண்டு பெரும்பான்மை இன அரசியல் கட்சிகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையில் செயற்பட்டு, அரசியல் தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை முறியடித்திருந்தன என்பது அரசியல் வரலாற்றில் அழுத்தமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கையின் அரசியல் வரலாற்றில் இந்த இரண்டு பேரின அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து தேசிய அரசை அமைத்ததை முதன் முதலாக 2015 ஆம் ஆண்டு நடைபெற்றிருக்கின்றது. ஒன்றையொன்று எதிர்த்து, அரசியல் தீர்வு காணும் நடவடிக்கையைப் பாழ்படுத்திய இந்தக் கட்சிகள் இரண்டும் இணைந்து அதிகாரத்தில் இருக்கும்போது, அரசியல் தீர்வுக்காக மேற்கொள்ளப்படும் முயற்சியானது வரலாற்றின் வழக்கத்துக்கு மாறாக எதிர்ப்பின்றி வெற்றிகரமாக





நிறைவேற்றப்படலாம். அதற்கான சரியான சந்தர்ப்பமாக இந்தத் தேசிய அரசு அல்லது நல்லாட்சி அரசின் ஆட்சிக் காலம் கருதப்பட்டது.

ஆனால், இந்த நல்லாட்சிக்கான அரசின் செயற்பாடுகள் இலவு காத்த கிளியின் நிலைமைக்குத் தமிழ் மக்களை இட்டுச் சென்று கொண்டிருக்கின்றனவோ என்று கருதத்தக்க வகையில் அமைந்திருக்கின்றன. இந்த அரசின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர், புதிய அரசமைப்பை உருவாக்குவதில் அரசு பின் வாங்கக் கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

## புதிய அரசமைப்பின் தேவை

இனப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காண்பதற்காகக் கடந்த காலங்களில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பல்வேறு பேச்சுகள் நடத்தப்பட்டன. பல்வேறு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருந்தன. ஆயினும், அந்தப் பேச்சுகள் பயனற்றவையாக முறிந்து போயின. செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மாற்று பேரின சிங்கள அரசியல் கட்சிகளின் எதிர்ப்புக் காரணமாக கிழித்தெறியப்பட்டன. அல்லது மீண்டும் பரிசீலனைக்கு எடுக்கப்பட முடியாத வகையில் கிடப்பில் போடப்பட்டன.

அது மட்டுமல்லாமல், அரசியல் தீர்வு என்பது சிறுபான்மை இனமக்களுக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்குவதாக இருக்க வேண்டும். அரசியலில் அவர்களுக்கான அசைக்க முடியாத - கேள்விக்கு உள்ளாக்கப்பட்டு இல்லாது ஒழிக்கப்பட முடியாத வகையிலான அரசியல் உரிமைகளை அளிப்பதாக அமைய வேண்டும். இத்தகைய ஒரு தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டுமானால், இலங்கையின் அரசமைப்பில் பல மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்று அரசியல் தீர்வு குறித்து சிந்தித்தவர்கள் உறுதியாக நம்பினார்கள்.

இந்த வகையில் எத்தனை பேச்சுகள் நடத்தப்பட்டாலும், எத்தனை ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டாலும், அவற்றில் எட்டப்படும் இணக்கப்பாடுகள், உடன்பாடுகள் என்பன சட்ட ரீதியாக அரசமைப்புக்குள் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற சிந்தனைத் தெளிவும் ஏற்பட்டிருந்தது.

இந்தப் பின்னணியில், யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர், தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும், இனப் பிரச்சினையை இனிமேலும் இழுத்தடித்துச் செல்ல முடியாது, அதற்கு ஓர் அரசியல் தீர்வு விரைவில் காணப்பட வேண்டும் என்ற சிந்தனைப் போக்குடைய நிலையில் ஜனநாயகத்தைக் கட்டிக்காத்து, அதனை நிலை நிறுத்துவதற்காக தேசிய அரசு ஆட்சியைக் கைப்பற்றியது.

இனப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற தேசிய அளவிலான தேவை நல்லாட்சி அரசின் ஆட்சியாளர்கள் மத்தியில் முதலில் ஏற்பட்டிருந்ததாகத் தெரியவில்லை. ஆயினும், நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு தனக்கும் தனது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் அரசியல் நலன்களுக்காக ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை, முன்னைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பயன்படுத்தியதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதே நேரத்தில் ஜனாதிபதிக்கு உரிய அதிகாரங்களைப் பயன்படுத்திக் காலம் காலமாகத் தானே ஜனாதிபதியாக - ஒரு சக்கரவர்த்தியைப் போல் ஆட்சி நடத்த வேண்டும் என்பதற்காக அவர் மேற்கொண்ட அரசியல் காய் நகர்த்தல்களை இப்போதைய ஆட்சியாளர்கள் விரும்பவில்லை.

ஜனநாயக நாட்டில் ஜனநாயக முறையில் ஆட்சி நடத்துவதற்குப் பதிலாக சர்வாதிகார ஆட்சியை நிறுவுவதற்காக மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட முயற்சிகளை முறியடித்து, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தார்கள்.

அது மட்டுமல்லாமல், நடைமுறையில் உள்ள விகிதாசாரத் தேர்தல் முறையைப் பயன்படுத்தி அரசியல் களத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த வெற்றி கொள்ள முடியாதவராகத் திகழ்வதையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டும். விகிதாசாரத் தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என்று அவர்கள் மிகவும் உறுதியாகத் தீர்மானித்தார்கள். நாட்டுக்குப் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதனூடாகவே இதனைச் சாதிக்க முடியும் என்று அவர்கள் தீர்மானித்தார்கள்.

ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகச் செயற்பட்ட அவர்களுக்குத் துணை புரிந்த கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் வேண்டுகோளுக்கமைய, புதிய அரசமைப்பில் அரசியல் தீர்வு காண்பதற்கு அவசியமான விடயங்களையும் உள்ளடக்குவதற்கு அவர்கள் இணங்கினார்கள்.

அரசியல் தீர்வு காண்பதற்கு உரிய அம்சங்கள் புதிய அரசமைப்பில் இடம் பெற வேண்டும் என்பது தமிழ்த் தேசிய கூட்டமைப்பினதும், தமிழ் மக்களதும் பிரதான நோக்கமாகும். ஆனால், அரசியல் தீர்விலும் பார்க்க, நிறைவேற்று அதிகாரத்தையும், விகிதாசாரத் தேர்தல் முறையையும் வைத்துக் கொண்டு தமது அரசியல் எதிரிகள் குறிப்பாக மஹிந்த அணியினர் நீண்ட காலம் ஆட்சி நடத்துவதற்கு சந்தர்ப்பம் அளிக்கக் கூடாது. அத்தகைய வாய்ப்பை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதே அவர்களின் பிரதான நோக்கமாக இருந்தது.

## மே தினம் ஏற்படுத்திய திருப்பம்

இத்தகைய ஒரு நிலைமையில்தான் புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும் என்பதற்கான நடவடிக்கைகளை நல்லாட்சிக்கான அரசு மேற்கொண்டிருக்கின்றது. அரசின் அந்தச் செயற்பாடுகள் வெற்றியளிப்பதற்கு சுதந்திரக் கட்சியின் மாற்று அணியினர் உள்ளிட்ட, ஏனைய அரசியல் தரப்புக்களைச் சேர்ந்தவர்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.

ஆனால் சுதந்திரக் கட்சியின் மாற்று அணியினராகிய மஹிந்த அணியினர் புதிய அரசமைப்புக்கு ஒத்துழைக்க முடியாது என்பதைத் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்கள். மஹிந்தவின் மேதினக் கூட்டத்தில் அணி திரண்டிருந்த அனைவருமே அவருக்கு ஆதரவானவர்கள். இந்த ஆதரவாளர்களே மஹிந்தவின் வாக்கு வங்கியின் சொந்தக்காரர்கள் என்று அனுமானிக்க முடியாது என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.

ஆனாலும், மே தினத்தன்று மக்கள் மத்தியில் தனக்கு உள்ள செல்வாக்கைக் காட்டும் வகையில் மக்கள் கூட்டத்தை அவர் அணி திரட்டியிருப்பது, அரச தரப்பினரை, அரசியல் ரீதியாகச் சற்று கவலையடையச் செய்திருக்கின்றது.

புதிய அரசமைப்பானது நாட்டுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியது. ஆகவே அதற்கு ஆதரவளிக்க முடியாது என்று மஹிந்த அந்தக் கூட்டத்தில் தெரிவித்திருந்த கருத்தும் அரசைச் சிந்திக்கச் செய்திருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷவின் இந்த நிலைப்பாடு காரணமாக, புதிய அரசமைப்பை உருவாக்குவதில் அரசு பின் வாங்கக் கூடிய ஆபத்து இருக்கின்றது என்று சம்பந்தன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

மஹிந்தவின் எழுச்சியானது, நல்லாட்சி அரசின் அரசியல் இருப்பைக் கேள்விக்கு உள்ளாக்க வல்லது. மக்களின் ஆதரவைப் பெற்ற அவர் எழுச்சியுற்றால், தேசிய அரசு அல்லது நல்லாட்சி அரசின் செயற்பாடு முடிவுக்கு வர நேரிடும். அத்தகைய ஒரு நிலைமைக்கு உள்ளாக்கத்தக்கச் செயற்பாடுகளைச் செய்வதற்கு நிச்சயம் அரசு முன்னெடுக்க முயற்சிக்காது.

மஹிந்த ராஜபக்ஷவின் எதிர்ப்பையும் மீறி, புதிய அரசமைப்பை உருவாக்கினால், அதனையே அரசியல் மூலதனமாகக் கொண்டு மஹிந்த அணியினர், அரசுக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுத்து ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்துவிடுவார்கள் என்ற அரசியல் அச்சமே இதற்கு முக்கிய காரணமாகும். இதன் அடிப்படையிலேயே சம்பந்தனின் கருத்தும் வெளிவந்திருக்கின்றது.

திருப்புமுனை நிலையை, நல்லாட்சி அரசில் அரசியல் தீர்வு காணப்படும் என்ற கூட்டமைப்பு தலைமையின் நிலைப்பாடு தளர்வடையும் நிலையிலேயே இப்போதைய அரசியல் நிலைமை காணப்படுகின்றது.

அரசியல் தீர்வு காணும் விடயத்தைத விட்டு, ஏனைய நிலைமைகளை நோக்கினாலும்கூட, அரசின் செயற்பாடுகள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ★

# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?” 175

பொன்.வேணு கிருஷ்ணா



**தென்கொரியாவில் அமெரிக்கா விரும்பாத ஒருவர் ஜனாதிபதியாகிறார்.**

தென்கொரியா புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்துள்ளது. அதன் பொருளாதார நெருக்கடி ஒரு புறமும் வடகொரிய நெருக்கடி மறுபுறமும் பெரும் சவால்களாகப் புதிய ஜனாதிபதியை நெருக்கும். தென்கொரிய நாடாளுமன்றில் பெரும்பான்மை விடயத்தில் இவர் சாராத பழைமை பேணும் கட்சிக்காரர்களின் ஆதரவு கிடைக்குமா என்பது சந்தேகமே. ஆனால், இவர் கண்மூடித்தனமான அமெரிக்க ஆதரவாளர் அல்லர். அதன் காரணமாக அமெரிக்க கொள்கைகளைக் கொரியப் பிராந்தியத்தில் எப்படிக் கையாளப் போகிறார் என்பதில் அமெரிக்க ஜனாதிபதியின் ஆலோசகர்கள் அக்கறைசெலுத்துவர்.

கொரிய அதிபராக இருந்த பார்க் ஜியூன் -ஹை, ஊழல் வழக்கில் பதவி நீக்கம்செய்யப்பட்டார்.அதைத் தொடர்ந்து புதிய அதிபர் தேர்தல் நடந்தது.

ஜனநாயகக் கட்சி சார்பில் மூன் ஜயே-இன்னும், கன்சர் வேடிவ் கட்சி வேட்பாளராக ஹாங் ஜோன்- பையோவும், மிதவாதியான அகின் சியோல்- சூ ஆகியோர் போட்டியிட்டனர்.

அதிபர் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நடந்தது. வாக்குப்பதிவு முடிந்ததும் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.

தொடக்கத்தில் இருந்தே ஜனநாயகக் கட்சி வேட்பாளர் மூன் ஜயே-இன் முன்னணியில் இருந்தார். முடிவில் அவர் அபார வெற்றிபெற்றார். அவர் 41.1 சதவீத வாக்குகள் பெற்றார்.

கன்சர்வேடிவ் கட்சி வேட்பாளர் ஹாங்ஜோன் பையோ 2ஆவது இடம் பிடித்தார். அவருக்கு 24.03 சதவீதம் வாக்குகள் கிடைத்தன. மிதவாதியான அகின் சியோல்-சூ 3ஆவது இடம் பிடித்தார். அவர் 21.4 சத வீதம் வாக்குகள் பெற்றார்.

மூன் ஜயே-இன் வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டதும் சியோல் நகரமே விழாக்கோலம் பூண்டது. அவரது ஆதரவாளர்களும், கட்சித் தொண்டர்களும் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் ஆரவாரம் செய்தனர்.

தேர்தலில் வெற்றி பெற்று புதிய அதிபராகப் பொறுப்பு ஏற்க இருக்கும் மூன் ஜயே-இன்னுக்கு 64 வயது ஆகிறது. இவர் மனித உரிமைகள் ஆணையகத்தின் முன்னாள் சட்டத்தரணி ஆவார்.


தேர்தலில் வென்றுள்ள மூன் ஜயே-இன் தென்கொரியாவின் 19ஆவது அதிபராவார். வடகொரியா ஆதரவாளரான இவர், சரியான சூழ்நிலை அமையும்போது அங்கு செல்ல விரும்புகிறார் எனவும் கூறினார்.

புதிய அதிபராகும் மூன் ஜயே-இன்னுக்கு தென் கொரியாவின் நட்பு நாடான அமெரிக்காவும்முகஸ்துதிக்காக வாழ்த்துத் தெரிவித்துள்ளது. வெள்ளைமாளிகையின் செய்தித்துறை அமைச்சர் சீன் ஸ்பைசர் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் தென்கொரியாவில் புதிய அதிபராகப் பொறுப்பு ஏற்க இருக்கும் மூன் ஜயே-இன்னுடன் பணிபுரிய அமெரிக்கா விரும்புகிறது. மேலும் தென் கொரியாவுடனான நட்புத் தொடர்ந்து வலுப்படும் என அமெரிக்கா நம்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்டை நாடான ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே வாழ்த்து செய்தி அனுப்பியுள்ளார். அதில் கிழக்கு ஆசியாவில் ஜப்பானும், தென்கொரியாவும் பொதுவான பிரச்சினையை (வட கொரியா மிரட்டல்) எதிர்கொண்டுள்ளது. எனவே, இரு நாடுகளும் தொடர்ந்து இணைந்து பணியாற்றி கொரிய தீபகற்பத்தில் அமைதியும், வளமும் பெருகப் பாடுபடுவோம் எனக் கூறியுள்ளார்.

வடகொரியாவுடன் உறவைப் புதுப்பிக்க விரும்பும் மூன், அமெரிக்காவின் ஏவுகணைத் தடுப்புக் கவச ஆயுதத் தொகுதியைத் தென் கொரிய மண்ணிலிருந்து அகற்றும் விருப்பம் உள்ளவர். அமெரிக்க ஆயுத மயப்படுத்தல் அவருக்கு விருப்பமில்லாதது.



அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் வடகொரியாவுடன் பேச்சை ஆரம்பிக்கவே விரும்புவார்.


அவரின் கொள்கையும் ட்ரம்பின் கொள்கையும் எந்தப் புள்ளியில் சந்திக்கும்-எந்தப் புள்ளியில் முரண்படும் என்பதைச் சற்றுப் பொறுத்திருந்ததே அவதானிக்க வேண்டும். எனினும், இவர் சீன சார்பு முடிவுகளையே எடுப்பார் எனச் சில சீன இராஜ தந்திரிகள் நம்புகின்றனர்.

(கேள்வி தொடரும்...)





# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




142

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### பரஸ்பரமாக இணங்கப்பட்ட போர் நிறுத்தம்

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீட்டர்சன், உதவி அமைச்சர் விடார் ஹெல்கிசன் ஆகியோர் ஒஸ்லோவில் ஓர் ஊடகவியலாளர் மாநாட்டைக் கூட்டுவித்து, இந்தப் போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையை உலகுக்குப் பகிரங்கப்படுத்தினர்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் ஜோன் பீட்டர்சன் இந்த உடன்படிக்கையின் நோக்கம் பற்றி கீழ்க் கண்டவாறு விளங்கப்படுத்தினார்: -

"அறுபதாயிரம் மக்களைப் பலி கொண்டு, பரந்துபட்ட அளவில் மனித அவலங்களுக்குக் காரணமாயிருந்த இன நெருக்கடிக்குச் சமரசப் பேச்சுகள் மூலம் தீர்வு காண்பதே இரு தரப்பினரதும் இறுதி இலட்சியமாகும்.

"இந்த அதிகாரபூர்வமான போர் நிறுத்த உடன்பாடு மூலம், பகை நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு இரு தரப்பினரும் உறுதி பூண்டுள்ளனர். இலங்கைக் குடிமக்களின் வாழ்வில் – அவர்கள் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் அல்லது வேறு இனத்தவராயினும் சரி – இயல்பு நிலையைத் தோற்றுவிக்க இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர். இந்தப் போர் நிறுத்த அமுலாக்கத்தை நேரடியாக மேற்பார்வை செய்யக்கூடிய, நோர்வே தலைமையிலான ஒரு சர்வதேசப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை ஏற்றுக்கொள்ளவும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

"இந்தப் போர்நிறுத்த உடன்படிக்கையை இறுதி செய்வதில் இரண்டு தரப்பினருமே துணிவான முடிவுகளை எடுத்தனர். சமாதானத்தை எட்டுவதிலும், அவர்கள் தொடர்ந்தும் துணிவான முடிவுகளை எடுப்பார்கள் என்பதற்கு இந்தப் போர் நிறுத்த உடன்பாடு ஓர் எடுத்துக்காட்டாக அமைகிறது. அரசியல் தீர்வை நோக்கிய ஒரு நீண்ட பாதையில் அவர்கள் பயணிக்கத் தொடங்கியுள்ளனர். அந்தப் பயணம் இலகுவாக இருக்கப் போவதில்லை. அவர்கள் துணிவோடும், திடசங்கற்பத்துடனும் பயணிக்க வேண்டி இருக்கும். அவர்கள் நெருக்கடிகளுக்கும் சவால்களுக்கும் முகம்



கொடுக்க வேண்டி ஏற்படும். அவர்கள் கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும். ஆனால், இரத்தக் களரியான சமர்க்களங்களை விட, துன்பகரமானதாக எதுவுமே இருக்கப்போவதில்லை. அத்தோடு, சமாதானத்தையும் நல்வாழ்வையும் விட சிறந்த பெறுபேறாக வேறு எதுவுமே இருக்கப் போவதில்லை.

"அமைதியை நோக்கிய நெடும் பயணத்தில் செல்லவிருக்கும் இலங்கைவாழ் மக்களுக்கும் அவர்களது தலைவர்களுக்கும் சர்வதேச சமூகத்தின் ஒத்தாசை அவசியமானது. சமாதானத்துக்கும் இன ஒற்றுமைக்கும் சர்வதேச உலகின் அரசியல் ஆதரவையும் நிதி உதவியையும் பெற்றுக்கொடுக்க அது வாய்ப்பளிக்கும். சவால்கள் மிகுந்த இந்த முயற்சியில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு நோர்வே எப்பொழுதும் தோள் கொடுத்து நிற்கும்.


"நான் இப்பொழுது இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றிய மேலதிக விவரங்கள் சிலவற்றைத் தருகிறேன்.

"முதலாவது, இந்த உடன்படிக்கை சகல போர் நடவடிக்கைகளையும் முழுமையாக நிறுத்திக் கொள்ளுதல், இரு தரப்புப் படைகளையும் பிரித்து வைத்தல், இரு தரப்பிலும் ஆயுதம் தரிக்காத ஆள்களின் நடமாட்டச் சுதந்திரத்தை அதிகரித்தல் என்பன உட்பட போர் நிறுத்தம் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை விவரிக்கிறது.

"இரண்டாவது, பொதுமக்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்தி, இராணுவப் பாவனைப் பொருள்கள் அல்லாத சகல அத்தியாவசிய பொருள்களையும் தங்கு தடையின்றி விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கி, நெடுஞ்சாலைகளையும் புகையிரதப் பாதைகளையும் திறந்து; மீன்பிடித் தடைகளை படிப்படியாக அகற்றி, இலங்கை வாழ் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் சகல இன மக்களது வாழ்வில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் நடவடிக்கைகள் பற்றியது.

"மூன்றாவது, நோர்வேயின் தலைமையிலான ஒரு சர்வதேச கண்காணிப்புக் குழு பற்றியது. இரு தரப்பினராலும் இணக்கம் காணப்பட்ட போர்நிறுத்தக் கடப்பாடுகளை இக் கண்காணிப்புக் குழு நேரடியாகத் தளத்துக்குச் சென்று மேற்பார்வையிடும்."

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட இந்த நிரந்தரப் போர் நிறுத்த உடன்படிக்கையை அனைத்துலகச் சமூகம் வரவேற்றது. அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகள் இரண்டு தரப்பினரையும் வாழ்த்தியதுடன், தமிழ்த் தேசிய இனச் சிக்கலுக்கு சமரசத் தீர்வு காணுமாறு வேண்டின. ஆனால், இந்தச் சமாதான முயற்சிகளை உலகம் பாராட்டிக் கொண்டிருந்த நேரத்தில், சிறிலங்காவின்



ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அம்மையாரோ, இந்த உடன்படிக்கையால், தான் 'அதிர்ச்சியும் ஏமாற்றமும்' அடைந்திருக்கிறார் எனக் கொன்னார். தன்னுடைய முன் அனுமதியைப் பெறாமல் இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டமையானது 'ஒரு ஜனநாயக விரோதச் செயல்' என்று கண்டித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைத் தாக்கினார். இந்த உடன்படிக்கையில் உள்ள குறிப்பிட்ட சில பகுதிகள் 'நாட்டின் இறைமையையும் தேசியபாதுகாப்பையும் விட்டுக் கொடுத்துவிட்டன' என அவர் வாதிட்டார். 'தமிழ்நெற்' இணையத் தளத்துக்கு ஒரு நேர்காணலில் அவரது விமர்சனத்துக்கு நான் பின்வருமாறு பதிலளித்தேன்:-

"இந்தப் போர் நிறுத்த உடன்பாட்டில் உள்ள விதிகள் இலங்கைத் தீவின் இறையாண்மைக்கும், தேசியப் பாதுகாப்புக்கும் பங்கம் விளைவித்திருப்பனவாக ஜனாதிபதி சந்திரிகா முன்வைத்துள்ள வாதம் போலியானது; ஏற்றுக்கொள்ள முடியாதது. 'முன்னணிப் பாதுகாப்பு நிலைகள்', 'எல்லைக் கோடுகள்', 'கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள்', 'கட்டுப்பாட்டுப் பிரதேச எல்லையில் உள்ள சோதனைச் சாவடிகள்' போன்ற சொற்பதங்களும் கருத்தாக்கங்களும் கள யதார்த்த மெய் உண்மைகளைப் பிரதிபலிப்பனவாகும். இரு தரப்பினரதும் பரிசீலனையுடனும் இணக்கப்பாட்டுடனுமே இந்தக் கருத்தாக்கங்கள் வகுக்கப்பட்டன. இச் சொற்பதங்கள் உணர்ச்சியைத் தூண்டிவிட்டு, பிராந்தியத்தின் கட்டுக்கோப்பான உறுதி நிலையைச் சீர்குலைத்துவிடும் என்பதும் இப்பிரச்சினையை காஷ்மீர் நெருக்கடியுடன் தொடர்புபடுத்துவதும் அபத்தமானதும் கேலிக் கூத்தானதும் ஆகும். கள யதார்த்த நிலையை ஏற்றுக் கொண்டாலேயே ஒரு விரிவான போர் நிறுத்த ஆவணத்தையும் கண்காணிப்பு வழிமுறைகளையும் உருவாக்க முடியும். தமிழ்ப் பகுதிகளில் பல இடங்களில் இரு தரப்புப் படையணிகளும் ஒன்றை ஒன்று எதிர்கொண்டு நிற்கின்றன. யுத்த மீறல்களைக் கண்காணிப்பதாயின் இரு தரப்புப் படைகளும் நிலைகொண்டு நிற்கும் பிரதேசங்களையும் அவற்றின் எல்லைக் கோடுகளையும் கண்காணிப்பாளர்கள் நிர்ணயித்துக் கொள்வது அவசியமாகிறது. அப்படிச் செய்தால் தான் போர் நிறுத்த மீறல்களை கண்காணிக்கும் வழிமுறைகளை வரையறுப்பது சாத்தியமாகும். புகழ்பெற்ற சர்வதேசக் கண்காணிப்பாளர்களால் வகுக்கப்பட்ட அடிப்படையான போர்நிறுத்த நடைமுறைகளை, இலங்கையின் இறையாண்மையை பங்கப்படுத்தும் விவகாரமாகக் கருதுவது அசட்டுத்தனமானது; நகைப்புக்கிடமானது."

(தொடரும்...)

# பிரான்ஸ் பொந்துவாஸில் தமிழின அழிப்பு நாள் நினைவேந்தல் நிகழ்வு







பிரான்ஸில் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ள தமிழின அழிப்பின் உச்ச நாளான மே 18 ஆம் திகதி, 8 ஆவது ஆண்டு நினைவு கூரல் மாபெரும் பேரணியாக இடம் பெறவுள்ளது. உரிமைக்காகவும், நீதிக்காகவும் உயிர் நீத்த நாட்டின் உயர்வானவர்களுக்கும் மரியாதை செலுத்தி பிரெஞ்சு தேசத்தவர்களாலும், ஏனைய வெளிநாட்டு மக்களாலும் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தப்பட்டுவரும் பிரான்ஸ் நாட்டின் முக்கிய முதன்மை இடங்களில் ஒன்றான குடியரசு சுதந்திரச் சிலை உள்ள இடத்தில் தமிழ் மக்களால் நீதிக்கான ஒன்று கூடல் நடத்தப்படவுள்ளது.

அதன் ஆரம்பக் கட்டமாக கடந்த 6 ஆம் திகதி சனிக்கிழமை பாரிஸின் புறநகர்ப் பகுதியில் ஒன்றான சேர்ஜி பொந்துவாஸ் தமிழ்ச் சங்கம், தமிழ்ச் சங்க இளையோர்களின் ஏற்பாட்டில் தமிழினப் படுகொலைக்கு உள்ளான தமிழீழ மக்களுக்காக சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. மே 18 ஆம் திகதிவரை தொடர்ந்து பல இடங்களில் கவனவீர்ப்புப் போராட்டங்கள் நடைபெற உள்ளன. (ஐ)

## தமிழின அழிப்புக்கு நீதி கோரி ஜேர்மனியில் ஊர்திப் பயணம்

தமிழர் வரலாற்றிலே மறக்க முடியாத நாள்கள், நீண்ட பெரு வலியுடன் ஈழத்தமிழர்களின் இறுதி மூச்சுக் காற்று தாயக மண்ணிலே புதையுண்டு, எரியுண்டு, கதறக் கதற படுகொலை செய்யப்பட்ட இந்த முள்ளிவாய்க்கால் படுகொலை தினம் என்றும் எமது நெஞ்சில் அணையாது எரியும் பெரு நெருப்பு. உடல் தெறிக்க, சிதை எரிய சிங்கள இனவாத அரசின் கொடூரச் செயல்கள் அரங்கேறிய அந்த நாள்களின் வலிகள் தமிழர்களின் வாழ்வில் என்றும் எச்சமாய் தொடர்கின்றன.

இந்த நிலையில்,தமிழின அழிப்பு வாரத்தை முன்னிட்டு நேற்று விழிப்புணர்வு ஊர்திப் பயணம் ஒன்று ஜேர்மன் முன்சின் என்னும் இடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 18 ஆம் திகதி தொடக்கம் இது இடம்பெறவுள்ளது.

ஜேர்மன் நாட்டின் மேற்பிராந்தியமான முன்சினில் இருந்து தலைநகர் பேர்லின்வரை தமிழின அழிப்பு கண்காட்சியை மையப்படுத்தி விழிப்புணர்வு ஊர்திச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இந்த விழிப்புணர்வு ஊர்திச் சுற்றுப் பயணம் ஊடறுக்கும் முக்கிய நகரமத்தியில் தமிழின அழிப்புக் கண்காட்சி வைக்கப்பட்டு அங்கு உள்ள நகரசபையுடன் சந்திப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தமிழ் இளையோர் அமைப்பு, ஈழத்தமிழர் மக்கள் அவை என்பன இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன. (ஐ)

## மாவீரர் நினைவுத்தூபி திரை நீக்க நினைவேந்தல்

தமிழீழக் கனவுகளை நெஞ்சில் சுமந்து காற்றோடு கலந்தவர்களை நினைவுகூரும் முகமாகப் பிரான்ஸ் கார்ஜ் – சார்சல் தமிழ் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க சார்சல் மாநகர சபை உதவியுடன் நிறுவப்பட்ட மாவீரர் நினைவு தூபி திரை நீக்கும் நிகழ்வு எதிர்வரும் 17 ஆம் திகதி பிரான்ஸ் சார்சல் நெல்சன் மண்டேலா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு சார்சல் நகர பிதா சிறப்பு வருகையாளராகக் கலந்து கொள்ளவுள்ளார். அவரோடு பல பிரஞ்சு அரசியல் பிரமுகர்களும் கலந்து கொள்வர்.

தமிழ்ச் சங்க மாணவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சிகளும், முள்ளிவாய்க்கால் நினைவாக இறுதி யுத்த காலத்தில் எமது மக்கள் உணவாக அருந்திய இலைக்கஞ்சி உணவு வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

## அமெரிக்க அறிவியல் பல்கலைக்கழகத்துக்கு இலங்கை விஞ்ஞானி




அமெரிக்காவின் தேசிய அறிவியல் பல்கலைக்கழகத்துக்கு புதிதாக 21 வெளிநாட்டு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் இலங்கை விஞ்ஞானி ஒருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை விஞ்ஞானி பேராசிரியர் மலிக் பீரிஸ், அமெரிக்காவின் தேசிய அறிவியல் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளார் என்று பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

மலிக் பீரிஸ், ஹொங்கொங் பல்கலைக்கழகத்தின் பொது சுகாதாரம், லிகா ஷிங் மருத்துவ பீடத்தின் பேராசிரியராக கடமையாற்றி வருகிறார்.

தேசிய அறிவியல் பல்கலைக்கழக அக்கடமிக்கு வெளிநாட்டு இணைப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றமை, விஞ்ஞானத்தில் சிறந்து விளங்குபவராகவும், விஞ்ஞானிக்கு உயர்ந்த மதிப்பெண்களில் ஒன்றாகவும் கருதப்படுகிறது. 67 வயதான பீரிஸ், உலக சுகாதார அமைப்பின் ஏ5 குறிப்பு ஆய்வகத்தின் இணை இயக்குநராவார். (ஐ)

## ஐ.நா. மாணவர்களின் தலைவராக இலங்கை யுவதி!



இலங்கையில் இருந்து ஒன்பது வயதில் நோர்வேக்கு புகலிடம் கோரிச் சென்ற யுவதி ஒருவரின் சாதனை தொடர்பில் தற்போது செய்திகள் வெளியாகியுள்ளன.

ஹம்சிகா பிரேம்குமார் என்ற 23 வயதுடைய இலங்கைப் பெண்ணே இவ்வாறு சாதனை படைத்துள்ளார்.

இந்த யுவதி தற்போது மருத்துவ பீடத்தில் கற்று வருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நோர்வே ஹோர்லாண்டில் ஐ.நா. மாணவர்களின் தலைவராகவும் இவர் செயற்படுகின்றார்.

பெர்கன் செஞ்சிலுவை அமைப்பு, நோர்வே புற்றுநோய் சமுதாயம் மற்றும் குழந்தைகளின் கிராமங்கள் போன்ற பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிலும் இவர் பணியாற்றி வருகின்றார்.

இந்த நிலையில், தனது வாழ்க்கையின் வெற்றிப் பயணம் தொடர்பிலும் தன் அனுபவங்கள் பற்றியும் ஹம்சிகா பகிர்ந்துள்ளார்.

"உள்நாட்டு யுத்தம் இடம்பெற்றமையால் உயிருக்குப் பயந்து 2002 ஆம் ஆண்டு புகலிடம் கோரி நோர்வே சென்றோம்.

"இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தால் வாழ்வதற்கே பயமாக இருந்தது. மருத்துவமனையிலோ, பாடசாலைகளிலோ பாதுகாப்பாக இருக்க முடியாது என்ற அச்ச நிலை நிலவியது.

"ஒன்பது வயதை அடைந்த போது, குடும்பத்துடன் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என நினைத்தேன்" என்று கூறியுள்ளார்.

தற்போது நோர்வேயில் வசிக்கும் ஹம்சிகா பிரேம்குமார், அவரது பயணத்தின் அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டு அனைவரையும் வெற்றிப் பாதைக்குச் கொண்டுசெல்ல முயற்சித்து வருகின்றார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

"எண்களாகவோ, புள்ளியியல் போன்றோ மனிதர்களைப் பார்க்காமல், மனிதர்களை மனிதர்களாக கருத வேண்டும்" என ஹம்சிகா அனைவருக்கும் நினைவூட்டியுள்ளார். (ஐ)

## முஸ்லிம்கள் புர்கா அணிவதைத் தடுக்க பொதுபலசேனா வழக்கு

முஸ்லிம் பெண்கள் புர்கா அணிவதைத் தடுக்க நீதி மன்றில் வழக்குத் தொடரப்படும் என்று பொது பல சேனா வின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசாரதேரர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொது இடங்களில் முஸ்லிம் பெண்கள் புர்கா அணிவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். முகத்தை மூடி 'ஹெல்மெட்' அணிந்தால் விரைந்து நடவடிக்கை எடுக்கும் பொலிஸார். முகத்தை மறைக்கும் புர்கா தொடர்பில் ஏதும் செய்வதில்லை. நாட்டில் ஒரே சட்டம் நடை முறைப் படுத்தப்பட வேண்டும். முஸ்லிம்களுக்கு மட்டும் நாட்டில் தனியான சட்டங்கள் இருக்க முடியாது.- என்றார்.

# மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட நாணயத்தாள்கள் சட்டரீதியானவை



## ஆளுநர் விளக்கம்

கொழும்பு, மே 11

இலங்கையின் 5 ஆயிரம் ரூபா நாணயத்தாளில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜீன் மகேந்திரனின் கையொப்பம் இருப்பதில் தவறில்லை. மத்திய வங்கியால் இதுவரையில் புழக்கத்துக்கு விடப்பட்டுள்ள நாணயத் தாள்கள், நாணயக் குற்றிகள் அனைத்துமே சட்ட ரீதியானவை என்று மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

அத்துடன், மத்திய வங்கியின் ஆளுநராக இலங்கை பிரஜை ஒருவரே இருக்க வேண்டும் என்ற சட்டவரையறைகள் இல்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்திய வங்கியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிங்கப்பூர் பிரஜாவுரிமையுள்ள மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரின் கையொப்பம் சட்ட ரீதியற்றது என்று பலரும் குறிப்பிடுகின்றனர். எனினும், இலங்கையின் முதலாவது மத்திய வங்கி ஆளுநர் ஓர் ஐக்கிய அமெரிக்க பிரஜை.

எனவே, வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் மத்திய வங்கியின் ஆளுநராகப் பதவி வகிக்கக் கூடாது என்று நான் கருதவில்லை.

அவ்வாறான ஒரு சட்டம் காணப்படுகின்றதா என்பது எனக்குத் துல்லியமாகத் தெரியாது. எனினும், அது தொடர்பில் பிரச்சினைகள் எவையும் இல்லை.

ஏனெனில், ஜனாதிபதியே அர்ஜீன் மகேந்திரனை மத்திய வங்கியின் ஆளுநராக நியமித்திருந்தார்.

மத்திய வங்கியின் ஆளுநர் நியமனம் சரியான நியதிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால், 5ஆயிரம் ரூபா நாணயத்தாளில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜீன் மகேந்திரனின் கையெழுத்திருப்பதில் தவறில்லை. அதனால் மக்கள் குழப்பமடையத் தேவையில்லை.- என்றார்.

# இலங்கை அகதிகள் 16 பேர் தாய் நாட்டுக்குத் திரும்பினர்



இந்திய முகாம்களில் புலம் பெயர்ந்த இலங்கை அகதிகள் 16 பேர் நேற்றுமுன்தினம் நாடு திரும்பியுள்ளனர் என்று சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர் வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் அந்த இலங்கையர்களை சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் அதிகாரிகள் வரவேற்றுள்ளனர்.

இதேவேளை, கடந்த இரண்டு வாரங்களில் இந்திய முகாம்களில் புலம் பெயர்ந்த இலங்கையர்கள் 56 பேர் நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கையில் இடம் பெற்ற உள்நாட்டுப் போரின் போது புலம்பெயர்ந்தவர் களே இவ்வாறு தற்போது தாயகம் திரும்பி வருகின்றனர்.

நாடு திரும்பும் புலம் பெயர் இலங்கையர்களுக்கான விமானப் பயணச்சீட்டு மற்றும் உணவு ஆகிய செலவுகளை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்பே பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

இவ்வாறு நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு மீள் குடியேற்ற வசதிகளை சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சு முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கழிவு முகாமைத்துவ தேசிய கொள்கையை உருவாக்கும் யோசனையை சமர்ப்பிக்குக!

## அமைச்சுகள், உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, மே 11

கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கையைத் தயாரிப்பதற்கான யோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சுகள், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.



உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர் உட்பட அரச அதிகாரிகளுடன் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

கழிவு முகாமைத்துவத்தின் போது உள்ளூராட்சி மன்றங்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள், அது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய தீர்வுகள் உட்பட பல விடயங்கள் பற்றி இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகத் தாம் எதிர் கொள்ளும் நெருக்கடிகள் பற்றியும், அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பாகவும் அவர்கள் ஜனாதிபதிக்கு விளக்கம் அளித்தனர்.

இதுதொடர்பில் ஜனாதிபதி தெரிவிக்கையில்-

கழிவு முகாமைத்துவம் தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சுற்றாடல் அமைச்சும், மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் வழங்கவேண்டிய அறிக்கைகளைத் துரிதமா கச் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் பொலித்தீன் தடை பற்றிய புதிய வர்த்தமானியை துரிதமாக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்க வேண்டும். புத்தளம், அறுவாக்குளம் கழிவகற்றும் பிரதேசத்தின் பணிகளை துரிதமாகப் பூர்த்திசெய்ய வேண்டும்.-என்றார்.

இதேவேளை, இலங்கையில் காணப்படும் குப்பை மேடுகள் தொடர்பான முழுமையான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. நாடு முழுவதும் கழிவகற்றும் 200 பிரதான இடங்கள் காணப்படுகின்றன. அவற்றில் 25 இடங்கள் மேல் மாகாணத்தில் உள்ளன. குப்பை அகற்றும் 20 இடங்களில் மாத்திரமே இந்தப் பிரச்சினை தலைதூக்கியிருக்கிறது என்று தெரியவந்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உட்பட அமைச்சர்கள் பலர் இதில் கலந்து கொண்டார்கள்.

# வெசாக் காலத்தில் பொருள்களின் விலையை அதிகரித்து விற்கும் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

வெசாக் பண்டிகைக் காலத்தில் பொருள்களின் விலையை அதிகரித்து விற்கும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாக கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

இதேவேளை அத்தியாவசிய உணவுப்பண்டங்கள் இறக்குமதி மற்றும் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஹேமக்க பெர்னாண்டோ, சந்தையில் பொருள்கள் தாராளமாக உள்ளன. எந்தப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு நிலவவில்லை என்று உறுதிபடத் தெரிவித்தார்.


இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த வெசாக் பண்டிகைக் காலத்தோடு ஒப்பிடும் போது இந்த வருட பண்டிகைக் காலத்தில் மொத்த விற்பனைச் சந்தையில் பொருள்களின் விலை கணிசமான அளவு குறைவடைந்துள்ளது.

கடந்த வருடம் மே மாதம் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 78 - 80 ரூபாவாக இருந்தது. தற்போது சந்தையில் ஒரு கிலோ 62- 63 ரூபா வரையே விற்பனை செய்யப்படுகின்றது.

கடந்த வெசாக் காலத்தில் ஒரு கிலோ சீனி 103 - 105 ரூபா வரைக்கும் விற்பனை செய்யப்பட்டது. இந்த வருடம் 98 - 78 ரூபா வரை மொத்த வியாபாரச் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது. பருப்பின் மொத்த விலையும் கடந்த வெசாக் காலத்துடன் ஒப்பிடும் போது வெகுவாகக் குறைந்துள்ளது அந்தவகையில் ஒரு கிலோ 175 - 185 ரூபா வரை விற்கப்பட்ட பருப்பு தற்போது ரூபா 135-145 வரை விற்பனை செய்யப்படுகின்றது.

சந்தையில் அரிசிக்கு எந்தத் தட்டுப்பாடும் இல்லை. ஆகக்கூடிய சில்லறை விலை நிர்ணயத்தின் அடிப்படையில் அரிசி விற்கப்படுகின்றது. தாராளமாக இந்தப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம். - என்றார்.



கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பூநகரி முக்கொம்பன் வித்தியாலய மாணவர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் வகையில் அந்தப் பாடசாலையில் வலைப்பந்து, காற்பந்து மற்றும் கிரிக்கெட் உள்ளிட்ட விளையாட்டுக்களில் ஈடுபடும் மாணவர்களுக்கு சீருடைகள் சிவன் அறக்கட்டளை நிறுவனத்தால் வழங்கி வைக்கப்பட்டன. சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதம், பாடசாலை அதிபர், கிளிநொச்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட மாணவ அணியினர் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# ஜாதவ் மரண தண்டனையை தற்காலிகமாக நிறுத்துக!

## சர்வதேச நீதிமன்றம் உத்தரவு



இந்திய கடற்படையின் முன்னாள் அதிகாரி குல்புஷன் ஜாதவின்மரணதண்டனையை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவுக்காக உளவு பார்த்த குற்றச்சாட்டை ஜாதவ் ஒப்புக் கொண்டமை போன்ற காணொளியை பாகிஸ்தான் அண்மையில் வெளியிட்டிருந்த நிலையில், மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்புக்கு சர்வதேச நீதிமன்றத்தால் கடிதம் ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளது.

குல்புஷன் ஜாதவின் மரண தண்டனைக்கு சர்வதேச நீதிமன்றம் தற்காலிகத் தடை விதித்துள்ளமை தொடர்பில் அவரின் தாயாரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது என மத்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

மேலும், ஜாதவுக்கு மரண தண்டனையை நிறைவேற்றினால் இந்தியா- பாகிஸ்தான் இடையேயான உறவு பாதிக்கும். அவருக்கு நீதி கிடைப்பதற்கான நடவடிக்கையை இந்தியா மேற்கொள்ளும். ஜாதவ் மீதான குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை. இது பாகிஸ்தானால் தவறாக சித்திரிக்கப்பட்ட குற்றச்சாட்டு என்றும் மத்திய வெளியுறவு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் உளவு பார்த்தார் எனக் கூறி 2016 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட இந்தியக் கடற்படையின் முன்னாள் அதிகாரி குல்பூஷண் ஜாதவுக்கு பாகிஸ்தான் இராணுவ நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது. இதனையடுத்து, அவரைக் காப்பாற்றும் முயற்சிகளை இந்தியா தீவிரமாக மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அ.தி.மு.க. இணைப்பு இழுபறியில்; முற்றுகின்றது வார்த்தைப் போர்!

சென்னை,மே 11

அ.தி.மு.க. இரு அணிகளை இணைக்கின்றமை தொடர்பில் பேச்சுக் குழுக்கள் அமைக்கப்பட்டு பல நாள்களாகி விட்டன. ஆனால், பேச்சு தொடர்ந்தும் நடைபெறாமல் ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுகின்றமையால், இரு தரப்புக்கும் இடையில் கருத்து மோதல் அதிகரித்துக் கொண்டே போகிறது. இதனால், அணி இணைப்பில் இழுபறி நிலைமையே நீடிக்கிறது.

அ.தி.மு.க. அணிகளை இணைப்பதற்கான வாய்ப்பு குறைந்துவிட்டதால், இரு அணியினரும், ஒருவரை ஒருவர் விமர்சிக்க ஆரம்பித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காஞ்சிபுரம் கிழக்கு மாவட்ட வீராங்கனைகள் கூட்டத்தில், முன்னாள் முதல்வர் பன்னீர் செல்வம் பங்கேற்றார். அவர் பேசுகையில்- 'தமிழக சட்ட சபைக்கு, விரைவில் தேர்தல் வர வாய்ப்புள்ளது'. -என்றார்.

இதற்குப் பழனிச்சாமி அணியைச் சேர்ந்த அமைச்சர் ஜெயகுமார், 'பன்னீரின் கருத்து விஷமத்தனமானது. அ.தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், ஜெயலலிதா ஆட்சி தொடர வேண்டும் என நினைக்கின்றனர்' .-என்றார். அதற்குப் பன்னீர் அணியைச் சேர்ந்த அமைச்சர் மைத்ரேயன், 'டுவிட்டரில்' பதில் வெளியிட்டார். அதில், 'அடுத்து வரும் தேர்தலிலும், அ.தி.மு.க. வெற்றி பெறும். ஆனால், ஜெயகுமார் கம்பெனி இருக்காது' என்றார்.

இந்த நிலையில், சென்னையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பழனிச்சாமி அணியைச் சேர்ந்த அமைச்சர் சி.வி. சண்முகம் தெரிவிக்கையில்-

பன்னீர்செல்வத்துக்கும், சேகர்ரெட்டிக்கும் உள்ள தொடர்பு குறித்து, விசாரணை ஆணையம் அமைத்து விசாரித்தால், விசாரணையைச் சந்திப்பதற்குப் பன்னீர் தயாரா? தமிழகத்துக்கு சேகர் ரெட்டியை அறிமுகம் செய்து வைத்தவரே அவர்தான். சேகர் ரெட்டியின், நாட்குறிப்பேட்டில் நான்கைந்து பெயர்கள் இருக்கிறன எனக் கூறி விசாரிக்கச் சொல்கின்றனர். ஆனால், சேகர் ரெட்டியுடன் பன்னீருக்கு உள்ள தொடர்பு குறித்து ஏன் விசாரணை நடத்தவில்லை? ஜெயலலிதா சிறையில் இருந்த போது சேகர் ரெட்டியைத் திருப்பதி தேவஸ்தான உறுப்பினராக்கியவர் பன்னீர் செல்வம். இதற்கெல்லாம் அவர் பதில் கூறத் தயாரா? -என்றார்.

'இதற்கு சேலத்தில் நடைபெறும் நிர்வாகிகள் கூட்டத்தில் பதிலடி கொடுக்கப்படும்' என பன்னீர் அணியைச் சேர்ந்த, முன்னாள் அமைச்சர் செம்மலை தெரிவித்துள்ளார்.

இருதரப்பினரும், ஜெயலலிதா தலைமையின் கீழ் செயற்பட்டமையையும், அவர்கள் கூறும் குற்றச்சாட்டுகள் நடந்த காலத்தில் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தமையையும் மறந்து, ஒருவரை ஒருவர் வசைபாடத் தொடங்கி உள்ளனர். பதவி சண்டையில் இரு பிரிவினரும் ஒருவரை ஒருவர் புழுதிவாரித் தூற்றுகின்றமை, அ.தி.மு.க. தொண்டர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. (ச)

# அந்நியச் செலாவணி மோசடி: சுதாகரனுக்குப் பிடியாணை!

சென்னை,மே11

அந்நியச் செலாவணி மோசடி வழக்குத் தொடர்பில் நீதி மன்றத்தில் ஆஜராகாத சசிகலா உறவினர் சுதாகரனுக்கு எழும்பூர் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது.

சுதாகரன் மீதான அந்நிய செலாவணி மோசடி வழக்கு, சென்னை எழும்பூர் பொருளாதார குற்றவியல் நீதிமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது சுதாகரனுக்குப் பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்ட நீதிபதி, எதிர்வரும் ஜுன் மாதம் 7 ஆம் திகதி அவரை நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், சுதாகரனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த அமலாக்கத்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இவர் சொத்துக் குவிப்பு வழக்கில் 4 வருடச் சிறைத்தண்டனை பெற்று தற்போது பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தினகரன் மீதான அந்நியச் செலாவணி மோசடி வழக்கு எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஜெ.ஜெ. தொலைக்காட்சிக்காக வெளிநாடுகளில் இருந்து ஒளிபரப்புச் சாதனங்கள் வாங்கியமை, ரிம்சாட் என்ற நிறுவனத்துக்கு, 'ஜெ.ஜெ. ரிவி' நிறுவனம் சார்பில், 5 லட்சம் ரூபா மதிப்புள்ள அமெரிக்க டொலர் வைப்பில் இடப்பட்டுள்ளமை மற்றும் ராமச்சந்திரன், ராஜேஷ் ஆகியோர் மூலமாக 'அப்போசெட்' என்ற நிறுவனத்துக்கு 10 லட்சம் ரூபா மதிப்பிலான தொகை சிங்கப்பூர் வங்கியில் முதலீடு செய்யப்பட்டுள்ளமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பில் சசிகலா, வி.என். சுதாகரன் மற்றும் டி.டி.வி. தினகரன் ஆகியோர் மீது சென்னை பொருளாதார குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகின்றது. (ச)



## இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில்

# பத்திரிகை விற்பனை 2.37 கோடியாக உயர்வு!

சென்னை,மே 11

இந்தியா முழுவதும் கடந்த 10 ஆண்டுகளில் தினசரி பத்திரிகைகளின் விற்பனை 2 கோடியே 37 லட்சம் பிரதிகளாக உயர்ந்துள்ளது என ஏ.பி.சி. தணிக்கை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தியா முழுவதிலும் உள்ள பத்திரிகைகளின் விற்பனையை கணக்கிட ஏ.பி.சி. தணிக்கை நிறுவனம் என்ற சுதந்திரமான அமைப்பு செயற்பட்டு வருகிறது. இந்த அமைப்பு 1948 ஆம் ஆண்டில் இருந்து கடந்த 69 ஆண்டுகளாகச் செயற்பட்டு வருகிறது. ஆண்டுக்கு 2 முறை பத்திரிகை விற்பனை கணக்கிடப்பட்டு வருகிறது.

இந்த அமைப்பில் 967 பத்திரிகை நிறுவனங்கள் உறுப்பினர்களாக உள்ளன. இதில் உறுப்பினர்களாக உள்ள பத்திரிகை நிறுவனங்களின் விற்பனையை மட்டும் இந்த அமைப்பு கணக்கிடும்.

2006 ஆம் ஆண்டு 3 கோடியே 91 லட்சம் என்றிருந்த தினசரி பத்திரிகைகளின் விற்பனை, கடந்த 10 ஆண்டுகளில் 6 கோடியே 28 லட்சமாக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கார் மீது லொறி மோதி விபத்து: மணமகன் உட்பட 9 பேர் சாவு!



மத்திய பிரதேசம் இச்சாவர் பகுதியில் கார் ஒன்றின் மீது லொறி மோதி விபத்துக்குள்ளானதில், மணமகன் உட்பட 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

மத்திய பிரதேசம் இச்சாவார் கிராமத்தை சேர்ந்த வாலிபர் ஒருவருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அவர் குடும்பத்துடன் காரில் சிர்சி என்ற கிராமத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அப்போது ஆக்ரா - மும்பை நெடுஞ்சாலை பகுதியில் பின்னால் வந்து கொண்டிருந்த லொறி கார் மீது பயங்கரமாக மோதியது.

இதில் காரில் வந்த மணமகன் உட்பட 9 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் இருவர் படுகாயம் அடைந்தனர்.

விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச)

# மகாராஷ்ட்ராவில் பன்றிக் காய்ச்சல்: 185 பேர் சாவு!

மகாராஷ்ட்ரா மாநிலத்தில் பன்றிக் காய்ச்சலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 185 ஆக உயர்வடைந்துள்ளது என அரசவட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அதன்படி கடந்த ஜனவரி முதலாம் ஆம் திகதி முதல் மே மாதம் 8 ஆம் திகதி வரையிலான காலகட்டத்தில் மட்டும் எச் 1 என் 1 வைரஸ் பாதிப்பின் மூலம் இந்த உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன என மகாராஷ்ட்ரா மாநிலத்தின் குடும்பநலமையத்தின் இணைத் தலைவர் முகுந்த் டிகிக்கர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட வாரியாக புனேவில் 55 பேரும், நாஷிக் மாவட்டத்தில் 26 பேரும், அகமத் நகரில் 17 பேரும் அமராவதி மாவட்டத்தில் 8 பேரும் அகோலா மற்றும் சோலாப்பூர் மாவட்டங்களில் 5 பேரும் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அமேசான் நிறுவனத்திடம் ரூ.70 லட்சம் மோசடி செய்த இளம் பெண் சிக்கினார்!

அமேசான் நிறுவனத்தில் வாங்கிய பொருள்களுக்குப் பதிலாக போலியான பொருள்களைத் திருப்பி அனுப்பி 70 லட்சம் ரூபா வரை மோசடி செய்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒன்லைன் வர்த்தக நிறுவனமான அமேசானைப் பொறுத்தவரை, வாடிக்கையாளருக்கு அனுப்பப்பட்ட பொருளில் ஏதாவது பிரச்சினை இருந்தால் அடுத்த 30 நாள்களுக்குள் திரும்ப அனுப்பலாம். அதன் பின்னர் பொருளுக்காக வாடிக்கையாளர் செலுத்திய பணம், அவரது வங்கிக் கணக்கில் அமேசான் நிறுவனத்தால் திரும்பச் செலுத்தப்படும்.

இந்த வசதியை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட பெங்களூரைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர், வெவ்வேறு பெயர்களில் அமேசான் நிறுவனத்தில் 104 பொருள்களை கடந்த ஓர் ஆண்டில் வாங்கியுள்ளார். இந்தப் பொருள்களை வாங்கிய சில நாள்களிலேயே, அவற்றில் ஏதோ குறை இருப்பதாகக் கூறி மீண்டும் திரும்ப அமேசான் நிறுவனத்திடமே அனுப்பியுள்ளார்.

ஆனால், அசல் பொருள்களுக்குப் பதிலாக அதே போன்ற போலி பொருள்களையே அனுப்பி அமேசான் நிறுவனத்தை ஏமாற்றி வந்துள்ளார். இவ்வாறாக சுமார் 70 லட்சம் ரூபா வரையில் அவர் ஏமாற்றியுள்ளார்.

இந்நிலையில் மோசடியில் ஈடுபட்டு வந்த இளம்பெண், சமீபத்தில் கையும் களவுமாக அமேசான் நிறுவனத்திடம் மாட்டிக் கொண்டுள்ளார். இதனை அடுத்து, அந்த இளம் பெண்ணைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ச)

## கொலரா நோயால் யேமனில் 34 பேர் உயிரிழப்பு!

யேமனில் பரவியுள்ள கொலரா நோயால் கடந்த இரு வாரங்களில் 34 பேர் உயிரிழந்தனர் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்த நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-


கடந்த மாதம் 27 ஆம் திகதி முதல் கடந்த 7ஆம் திகதி வரை 9 மாகாணங்களில் 2 ஆயிரத்து 22 பேர் வயிற்றுப் போக்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலக அளவில் சிரியா, தெற்கு சூடான், நைஜீரியா மற்றும் ஈராக் நாடுகளை போல் மனிதாபிமான அவசர நிலை உள்ள நாடாக யேமன் திகழ் கின்றது.

யேமனில் நிலவும் போர் சூழல் காரணமாக மருத்துவமனைகள் அழிக்கப்பட்டுள்ளன. இதனால் லட்சக் கணக்கான மக்கள் உணவு மற்றும் தூய்மையான குடிதண்ணீர் கிடைக்கப்பெறாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.- என்றுள்ளது.

# வடகொரியப் பதற்றத்தை தீர்க்க உரிய நடவடிக்கை

## உறுதியளித்தார் தென்கொரிய புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற மூன் ஜே



சியோல், மே 11

வடகொரியாவின் அணு சக்தித் திட்டங்களால் ஏற்பட்டிருக்கும் பதற்றத்தைத் தீர்க்கும் வகையில் செயற்படுவேன் என்று தென் கொரியாவின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள மூன்ஜே இன் உறுதியளித்துள்ளார்.

தென் கொரிய ஜனாதிபதியாக நேற்று முன்தினம் பத விப்பிரமாணம் செய்து கொண்ட மூன் ஜே இன், அதன்பின்னர்தனது கன்னி உரையில் மேற்படி உறுதி எடுத்துக்கொண்டார்.

தனதுரையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கொரிய தீபகற்பத்தில் ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தீர்ப்பதற்கும் அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் பேச்சுகளை நடத்துவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், தென் கொரிய முன்னாள் ஜனாதிபதியின் ஆட்சிக்கு வீழ்ச்சியை ஏற்படுத்திய ஊழல் மோசடிகள் இல்லாதொழிக்கப்படும். - என்றார்.

தென் கொரியாவின் முன்னாள் ஜனாதிபதி பார்க் ஜியுன் ஹை, ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களால் பதவி நீக்கம் செய்யப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது.

இந்தத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் மூன் ஜே இன்னும், கன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளராக ஹொங் யூன்-பையோனும் மிதவாதியான அஹ்ன் சியொல்- சோ ஆகியோரும் போட்டியிட்டனர்.

இறுதி முடிவுகளின் பிரகாரம் 41.1 சதவீத வாக்குகளைப் பெற்று மூன் ஜே இன் வெற்றிபெற்றார் என்று அறிவிக்கப்பட்டது. ஹொங் யூன்-பையோ 25.5 சதவீத வாக்குகளையும் அஹ்ன் சியொல்-சோ 21.4 சதவீத வாக்குகளையும் பெற்றுக்கொண்டனர்.

தேர்தல் முடிவுகள் வெளியாகி சில மணி நேரங்களிலேயே மூன் ஜே இன் புதிய ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பட்டாசுக் களஞ்சியத்தில் தீ விபத்து; 14 பேர் பரிதாபகரமாக உயிரிழப்பு!

## மெக்ஸிக்கோவில் திருவிழா ஏற்பாட்டில் நடைபெற்ற துயரம்

மெக்ஸிக்கோ, மே 11

மெக்சிகோவில் உள்ள பட்டாசு கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்தில், அங்கு வேலை செய்துகொண்டிருந்த 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மெக்சிகோ நாட்டின் மத்திய பியூப்லா மாநிலம், சான் இசிட்ரோ கிராமத்தில் திருவிழாவுக்காக ஏராளமான பட்டாசுகள் மற்றும் வாண வேடிக்கைக்கான வெடிபொருள்களை ஒரு களஞ்சியத்தில் வைத்திருந்தனர். விழா ஏற்பாடுகளைப் பொதுமக்கள் தீவிரமாக மேற்கொண்டுவந்தனர்.

இந்தநிலையில், நேற்று முன்தினம் இரவு திடீரென பட்டாசுகள் வைத்திருந்த களஞ்சியத்தில் தீ விபத்து ஏற்பட்டது. பட்டாசுகள் மற்றும் வெடிபொருள்கள் வெடித்து நாலாபுறமும் சிதறி பொது



மக்கள் மீது விழுந்தன.

தகவல் அறிந்த தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்குச் சென்று தீயைக் கட்டுப்படுத்தி மீட்புப் பணியில் ஈடுபட்டனர். படுகாயம் அடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இந்தத் தீ விபத்தில் குழந்தைகள் உட்பட 14 பேர் உயிரிழந்தனர்; 22 பேர் பலத்த காயம் அடைந்தனர் என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அமெரிக்க புலனாய்வுத் துறை தலைமை அதிகாரி பதவி நீக்கம்



வொஷிங்டன், மே 11

அமெரிக்க முன்னாள் இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளிங்டனின் மின்னஞ்சல் விவகாரம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட புலன்விசாரணைப் பிரிவின் தலைமை அதிகாரி ஜேம்ஸ் கோமி ஜனாதிபதி ட்ரம்பால் பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

இதுதொடர்பில் வெள்ளை மாளிகை வெளியிட்ட உத்தியோபூர்வ அறிக்கையில்-

'ஹிலாரி கிளிங்டனின் மின்னஞ்சல்கள் தொடர்பான ஜேம்ஸ் தவறான தகவல்களை வெளிப்படுத்தினார் என்று அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அதன் காரணமாக ஜேம்ஸ் பணி நீக்கம் செய்யப்படுகின்றார்.' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ட்ரம்பின் பிரசார நடவடிக்கைகளுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான தொடர்புகள் சம்பந்தமாக விசாரணை நடத்தியால் ஜேம்ஸ் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று ஜனநாயகக் கட்சி சார்பில தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குர்திஷ் படையினருக்கு ஆயுதங்கள் வழங்குவதற்கு அமெரிக்கா முடிவு!

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்துகின்ற குர்திஷ் படையினருக்கு அமெரிக்கா ஆயுதங்களை வழங்கவுள்ளது.

இதற்கான ஒப்புதலை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வழங்கி உள்ளார் என்று அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகம் அறிவித்துள்ளது.

சிரிய ஜனநாயகப் போராளிகளின் அங்கமான குர்திஷ் படையினருக்கு, ராக்கா பிராந்தியத்தில் இருந்து ஐ.எஸ். தீவிரவாதிகளை வெளியேற்றுவதற்காக இவ்வாறு ஆயுதங்கள் வழங்கப்படவுள்ளன.

எனினும் இதற்குத் துருக்கி எதிர்ப்பைத் தெரிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குர்திஷ் படையினரையும் தீவிரவாதிகள் என்ற கோணத்திலேயே பார்க்கும் துருக்கி, சிரியாவில் அவர்கள் அதிக நிலங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதைத் தடுக்க முயற்சிக்கிறது.

இந்த விடயம் தொடர்பிலும் அமெரிக்கா அவதானம் செலுத்தி இருப்பதாக, அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகத்தின் பேச்சாளர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளர், துருக்கியின் பாதுகாப்புச் செயலாளருடன் பேச்சு நடத்தி இருப்பதாகக் கூறப்படுகிறது.

எனினும் துருக்கியின் தரப்பில் இன்னும் எந்தக் கருத்தும் வெளியிடப்படவில்லை.

## உலக நாடுகள் ஒற்றுமையுடன் செயற்பட புடின் வலியுறுத்து

நாடுகளிடையே ஏற்பட்ட பிரிவினையால் இரண்டாம் உலகப்போர் நடைபெற்றது. எனவே இதுபோன்ற போர்கள் இனிமேல் நடைபெறாமல் இருப்பதற்கு உலக நாடுகள் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் வலியுறுத்தியுள்ளார்.

இரண்டாம் உலகப்போரின் 72 ஆவது ஆண்டு வெற்றி தினம் ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். உலகம் முழுவதும் அமைதி நிலவ வேண்டும் என்றே ரஷ்யா விரும்புகிறது. எனினும் ரஷ்யாவின் இறையாண்மைக்கு ஆபத்து ஏற்பட்டால் அதை இராணுவ ரீதியில் எதிர்கொள்வோம் என்று மேலும் குறிப்பிட்டார்.

# சீன சுரங்கப் பாதையில் பஸ் விபத்து; 12 பேர் சாவு



சீனாவில் சுரங்கப்பாதையில் பயணித்துக் கொண்டிருந்த பாடசாலை பஸ் ஒன்று விபத்தில் சிக்கி தீப்பிடித்ததில் சாரதி மற்றும் பிள்ளைகள் 11 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சீனாவின் கிழக்குப் பகுதியில் உள்ள ஷாண்டாங் மாகாணத்தின் வெய்ஹாய் நகரில் உள்ள சர்வதேச பாலையர் பாடசாலைக்கு குழந்தைகளை ஏற்றிக்கொண்டு பஸ் ஒன்று நேற்று புறப்பட்டுச் சென்றது. அந்த பஸ், சுரங்கப்பாதைக்குள் சென்று கொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதுடன் பஸ் தீப்பிடித்து எரிந்தது.

இந்தக் கோர விபத்தில் தென்கொரிய குழந்தைகள் 5 பேர், சீனக் குழந்தைகள் 6 பேர் என 11 மாணவர்களும், பஸ் சாரதியும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்று அந்த நாட்டு உள்ளூர் நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது.

# இங்கிலீஷ் பிரிமீயர் லீக் உதைபந்தாட்டம்: வெற்றியை நெருங்குகிறது செல்சியா அணி!



லண்டன், மே 11

இங்கிலீஷ் பிரிமீயர் லீக் உதைபந்தாட்டத் தொடரில் செல்சியா அணி வெற்றியை நெருங்கி வந்துள்ளது. இந்த அணி தற்போது 84 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது.

இங்கிலாந்தில் உள்ள முன்னணி 20 உதைபந்து 'கிளப்' அணிகளுக்கு இடையிலான இங்கிலீஷ் பிரிமீயர் லீக் கால்பந்து தொடர் ஒவ்வொரு வருடமும் ஓகஸ்ட் மாதம் முதல் மே மாதம் வரை நடைபெறும். இந்த 'சீசனுக்கான' பிரிமீயர் லீக் தொடர் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் தொடங்கியது.

ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா இரண்டுமுறை மோத வேண்டும். 38 ஆட்டங்களில் எந்த அணி புள்ளிகள் பட்டியலில் முதல் இடம் பிடிக்கிறதோ, அந்த அணி கிண்ணத்தை வெல்லும்.

தற்போதுவரை ஏறக்குறைய அனைத்து அணிகளும் 35 போட்டிகளில் விளையாடியுள்ளன. இன்னும் மூன்று போட்டிகள் மட்டுமே மீதமுள்ளன. எதிர்வரும் 23 ஆம் திகதிவரை இந்தத் தொடர் நடைபெற இருக்கிறது.

தற்போது வரை செல்சியா அணி 35 போட்டிகளில் விளையாடி 27 வெற்றிகள், 4 சமநிலைகள் மற்றும் ஐந்து தோல்விகள் மூலம் 84 புள்ளிகள் பெற்று முதல் இடத்தில் உள்ளது.

டோட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் 35 போட்டிகளில் விளையாடி 23 வெற்றிகள், 8 சமநிலைகள் மற்றும் நான்கு தோல்விகளுடன் 77 புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்தில் உள்ளது.

இரு அணிகளுக்கும் தலா மூன்று போட்டிகள் உள்ளன. மூன்று போட்டிகளிலும் செல்சியா தோல்வி அல்லது இரண்டு தோல்விகள், ஒரு சமநிலை ஆகி டோட்டன் ஹாம் ஹாட்ஸ்பர் மூன்றிலும் வெற்றி பெற்றால் மட்டுமே டோட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் கோப்பையை வெல்ல முடியும். ஆனால், இதற்கு வாய்ப்பே இல்லை.

34 ஆவது போட்டியில் செல்சியா அணி மிடில்ஸ் புரோ அணியை 3-0 என வீழ்த்தியது. அதேசமயத்தில் டோட்டன்ஹாம் ஹாட்ஸ் பார் வெஸ்ட் ஹாம் யுனைடெட் அணிக்கு எதிரான போட்டியில் 0-1 என தோல்வியடைந்தது. இதனால், செல்சியா 7 புள்ளிகள் முன்னிலை பெற்றுள்ளது.

மற்ற முன்னணி அணிகளான மான்செஸ்டர் யுனைடெட் 65 புள்ளிகளுடன் 5 ஆவது இடத்தையும், மான்செஸ்டர் சிட்டி 69 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்திலும், லிவர்பூல் 70 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலும் உள்ளன.

## நெட்வெஸ்ட் இருபதுக்கு 20 தொடர்: மஹேல ஜயவர்தனவுக்கு உள்நாட்டு வீரருக்கான தகுதி!

கொழும்பு, மே 11

இங்கிலாந்தில் நடைபெறவுள்ள நெட்வெஸ்ட் இருபதுக்கு 20 பிளாஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கு வெளிநாட்டவர் அல்லாத வீரர்கள் பட்டியலில் மஹேல ஜயவர்தன இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

டென்மார்க் பிரஜையான கிறிஸ்டினாவைக் கரம்பிடித்தமையால் 'உள்நாட்டு' வீரருக்கான தகுதியை மஹேல ஜயவர்தன கொண்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



இறுதிச் சுற்று வரை இந்த சுற்றுப் போட்டி முழுவதும் மஹேல ஜயவர்தன விளையாடவுள்ளார் என்பதுடன், லன்காஷயர் கிரிக்கெட் அணியுடன் எதிர்வரும் ஜூலை மாதம் இணையவுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து 2015 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற மஹேல, அதன் பின்னர் பல்வேறு நாடுகளில் இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியுள்ளார். அத்துடன், சில அணிகளுக்கு ஆலோசகராகவும் பயிற்று நராகவும் பணியாற்றியுள்ளார்.

இதற்கு முன்னர் சசெக்ஸ், சமர்செட் பிராந்திய அணிகளுக்காக நெட்வெஸ்ட் இருபதுக்கு 20 பிளாஸ்ட் போட்டிகளில் விளையாடிய மஹேல, தற்போது நடைபெற்றுவரும் ஐ.பி.எல். போட்டிகளில் மும்பை இண்டியன்ஸ் அணியின் தலைமைப் பயிற்றுநராக கடமையாற்றுகின்றார்.

நெட்வெஸ்ட் இருபதுக்கு 20 தொடரில் பங்குபற்றுவது தொடர்பில் மஹேல ஜயவர்தன தெரிவித்தவை வருமாறு:-

''எனது கிரிக்கெட் வாழ்க்கையில் நான் இன்னும் நெட்வெஸ்ட் இருபதுக்கு 20 பிளாஸ்ட் கிண்ணத்தை வென்றதில்லை. எதிர்வரும் கோடைகாலத்தில் அந்தக் கிண்ணத்தை வென்றெடுக்க வேண்டும் என்பதில் ஆர்வமாக உள்ளேன்.''- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மஹேல ஜயவர்தன 149 டெஸ்ட் போட்டிகளில் 11,814 ஓட்டங்களையும் 448 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 12,650 ஓட்டங்களையும் 55 சர்வதேச இருபதுக்கு 20 போட்டிகளில் 1,493 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.




## இலங்கை கிரிக்கெட் சபையின் உயர் செயற்திறன் மையம் பல்லேகலவில் ஆரம்பம்!

கொழும்பு, மே 11

கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் அரங்கில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆறு பகுதிகளைக் கொண்ட உள்ளகக் கிரிக்கெட் பயிற்சி மையம் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றதுடன், அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்கெடுக்கவுள்ள இலங்கை வீரர்களுக்கான 06 நாள்கள் பயிற்சி முகாமும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

புதிதாக நிறுவப்பட்டுள்ள இந்த உள்ளக பயிற்சி நிலையம், இலங்கை கிரிக்கெட் சபையின் கனவுத்திட்டங்களுள் ஒன்றாகும்.

அதாவது, நாடு தழுவிய ரீதியில் வீரர்களின் தரத்தை முன்னேற்றுவதற்காக, நான்கு சிறப்பு மாகாண மத்திய நிலையங்களை நிறுவுதல் எனும் திட்டத்தின் முதற்கட்டம் பூர்த்தியடைந்துள்ளதை இது காட்டுகின்றது.

நான்கு மத்திய நிலையங்களாக கொழும்பு (பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் அரங்கு), காலி (காலி சர்வதேச கிரிக்கெட் அரங்கு), தம்புள்ள (ரங்கிரி தம்புள்ள சர்வதேச கிரிக்கெட் அரங்கு) மற்றும் கண்டி (பல்லேகல சர்வதேச கிரிக்கெட் அரங்கு) ஆகியன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையங்கள், இந்த மாவட்டங்களில் இடம்பெறும் கிரிக்கெட் அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் பயிற்சிகளுக்கு ஊக்கமளிக்கும் பிரதான காரணியாகத் தொழிற்படும்.

இந்நிலையங்கள் அந்தந்த மாகாணங்களால் நிர்வகிக்கப்படும்.

ஒவ்வொரு கிரிக்கெட் அரங்கிலும் கணினி இணைப்புடன் கூடிய உயர் தரத்திலான உள்ளக பயிற்சி நிலையம், நீச்சல் தடாகம், மீளுருவாக்க மற்றும் ஆற்றுப்படுத்தல் நிலையம் ஆகிய வசதிகளுடன் கூடிய உயர் செயற்திறன் நிலையங்களை நிறுவுவதற்கான திட்டமும் ஆலோசனையில் உள்ளது.

மத்திய நிலையத்தின் அங்குரார்ப்பண வைபவம் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர மற்றும் இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இலங்கை தேசிய அணியினர் நேற்று முன்தினம் தலதா மாளிகைக்குச் சென்று, சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் வெற்றிக்கான பிரார்த்தனை நிகழ்வுகளிலும் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# கொல்கத்தாவை வீழ்த்தியது கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி!



மொகாலி, மே 11

10 ஆவது ஐ.பி.எல் தொடரின் 49 ஆவது போட்டியில் மக்ஸ்வெல் தலைமையிலான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி, கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு எதிராக 14 ஓட்டங்களால் த்ரில் வெற்றி ஒன்றினை பதிவு செய்துள்ளது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் ஆகிய அணிகளுக்கிடையிலான இந்தப் போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

பிளே ஓவ் சுற்றுக்குத் தகுதி பெற கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டிய சூழலில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களம் இறங்கியது.

சொந்த மைதானத்தில் வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்ற நிலையில் களம் இறங்கிய அவ்வணி சார்பில் மார்ட்டின் குப்தில், வோரா ஆகியோர் ஆரம்ப வீரர்களாக களம் இறங்கினர்.

வோரா 16 பந்துகளில் 25 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும், குப்தில் 16 பந்தில் 12 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும் ஆட்டம் இழந்தனர். அடுத்து வந்த ஷோன் மார்ஷ் 11 ஓட்டங்களில் வெளியேறி ஏமாற்றமளித்தார்.

பின்னர் 4 ஆவது வீரராகக் களம் இறங்கிய சகா 38 ஓட்டங்களும், அடுத்து வந்த மக்ஸ்வெல் 25 பந்தில் 44 ஓட்டங்களும் எடுக்க, கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 167 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதைத் தொடர்ந்து 168 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி களமிறங்கியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களம் இறங்கிய எஸ்.பி நரைன் 18 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

இதனைத் தொடர்ந்து களம் இறங்கிய கௌதம் கம்பீர் 8 ஓட்டங்களையும், உத்தப்பா ஓட்டங்கள் எவையும் பெற்றுக்கொள்ளாத நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

ஒரு பக்கம் விக்கெட்டுகள் சரிந்தாலும் மற்றொரு ஆரம்ப துடுப்பாட்ட வீரரான சி.ஏ. லின் அதிரடியாக விளையாடி 84 ஓட்டங்களைக் குவித்தார்.

ஏனைய வீரர்கள் ஓட்டங்களைக் குவிக்கத் திணறியமையின் காரணமாக கொல்கத்தா அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 153 ஓட்டங்களை மட்டுமே குவித்தது.

பஞ்சாப் அணி சார்பில் சிறப்பாக பந்து வீசிய திவேதியா, எம்.எம். ஷர்மா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

கடைசி ஓவரில் த்ரில் வெற்றி பெற்ற பஞ்சாப் அணி பிளே ஓவ் சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை தக்க வைத்துக்கொண்டுள்ளது. அடுத்து வரும் இரண்டு போட்டிகளில் வெற்றி பெரும் பட்சத்தில் பஞ்சாப் அணி 'பிளே ஓவ்' சுற்றுக்கு முன்னேற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலக மெய்வன்மை போட்டிக்கு இலங்கை வீராங்கனை தகுதி!



கொழும்பு, மே 11

ஐக்கிய அமெரிக்காவின் இயூஜின் நகரில் நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் பெண்கள் பிரிவில் வெற்றியீட்டிய ஹிருணி விஜயரட்ண, லண்டனில் நடைபெறவுள்ள உலக மெய்வன்மைப் போட்டிகளில் பங்கு பற்றுவதற்கு தகுதி பெற்றுள்ளார்.

இயூஜின் மரதன் ஓட்டப் போட்டியை 2 மணித்தியாலங்கள் 43 நிமிடங்கள் 31 செக்கன்களில் நிறைவு செய்த 26 வயதான ஹிருணி விஜயரட்ன என்பவரே உலக மெய்வன்மைப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஹிருணி, சிறுபராயம் முதல் ஐக்கிய அமெரிக்காவில் கல்வி கற்றுவந்தமையுடன் மத்திய தூர, நெடுந்தூர ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றிவருகின்றார்.

இயூஜின் மரதன் ஓட்டப் போட்டியில் முதல் பத்து இடங்களைப் பெற்ற ஆண்கள் அனைவரும் ஐக்கிய அமெரிக்கா அல்லது கனடாவைச் சேர்ந்தவர்களாவர்.

மரதன் ஓட்டப் போட்டியின் ஆண்கள் பிரிவில் வொஷிங்டனைச் சேர்ந்த ஸ்டீவ் டெக்கோக்கர் (2 ம. 29 நி. 46 செக்.), கனடாவைச் சேர்ந்த ரோல் ஆர்க்கொஸ் (2 ம. 30 நி. 40 செக.), வொஷிங்கடனைச் சேர்ந்த ஷோன் ப்ரண்ட்சென் (2 ம. 31 நி. 50 செக்) ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றனர்.

பெண்கள் பிரிவில் ஹிருணிக்கு அடுத்ததாக கஸக்ஸ்தானைச் சேர்ந்த யெலெனா நெனாஸியாஷ்விலி (2 ம. 44 நி. 11 செக்கன்.) இரண்டாம் இடத்தையும் அமெரிக்காவைச் சேர்ந்த மாரிசா ரெயான் (2 ம. 46 நி. 50 செக்.) மூன்றாம் இடத்தையும் பெற்றனர். ஹிருணி, இருபாலாருக்குமான ஒட்டுமொத்த நிலையில் 11ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

இதேவேளை, லண்டன் உலக மெய்வன்மைப் போட்டியில் அநுராத குறே பங்குபற்றுவதற்கு ஏற்கனவே தகுதிபெற்றுவிட்டார் என்றும் ரியோ 2016 ஒலிம்பிக்கில் அநுராதவுடன் பங்குபற்றிய நிலூக்கா ராஜசேகர இன்னும் அடைவு மட்டத்தை (2 ம. 45 நி. 00 செக்.) எட்டவில்லை எனவும் இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் பதிவாளரும் மெய்வன்மைப தெரிவுக் குழுத் தலைவருமான சமன் குமார தெரிவித்தார்.

லண்டன், உலக மெய்வன்மைப் போட்டிகளுக்கான அடைவு மட்டத்தை எட்டுவதற்கான கடைசி திகதி எதிர்வரும் ஜூலை 17ஆம் திகதி ஆகும்.

# பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் மோசமான ஆட்டம்: ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டார் கிறிஸ்கெய்ல்!

பெங்களூர், மே 11

பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி வெளிப்படுத்தி வரும் மோசமான ஆட்டத்துக்காக பெங்களூர் ரசிகர்களிடம் கிறிஸ்கெய்ல் மன்னிப்புக் கேட்டுள்ளார்.

நடைபெற்றுவரும் 10 ஆவது ஐ.பி.எல் தொடரில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் ஆட்டம் மிகவும் மோசமாக காணப்படுகிறது.

வீராட் கோஹ்லி, டி வில்லியர்ஸ், கிறிஸ் கெய்ல், வொட்சன், கேதர் ஜாதவ் போன்ற அதிரடி வீரர்களைக் கொண்ட அந்த அணி இதுவரை 2 ஆட்டத்தில் மட்டுமே வெற்றி பெற்று இருக்கிறது. 10 ஆட்டங்களில் தோற்று 'பிளே ஓவ் வாய்ப்பை ஏற்கனவே இழந்தது. ஒரு ஆட்டத்தில் முடிவு எட்டப்படவில்லை. அந்த அணி கடைசி 'லீக்' ஆட்டத்தில் டில்லி டேர்டெவில்சை எதிர்வரும் 14 ஆம் திகதி சந்திக்கிறது.

இந்த நிலையில், பெங்களூர் மோசமான ஆட்டத்துக்காக கிறிஸ்கெய்ல் பெங்களூர் ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.



பெங்களூரில் இடம் பெற்ற தனியார் நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு மன்னிப்புக் கோரியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எங்கள் அணி வீரர்களின் ஆட்டம் மிகவும் மோசமாக இருந்தது. வீரர்களுக்கு ஆதரவு கொடுத்த பெங்களூர் ரசிகர்களுக்கு தோல்வியால் மிகுந்த ஏமாற்றம் ஏற்பட்டு இருக்கும். இதற்காக ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த சுனில் நரீன் கொல்கத்தா அணியில் தொடக்க வீரராக விளையாடி அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தியமை மகிழ்ச்சி அளிக்கிறது.

எங்களுக்கு எதிராக ஆட்டத்தில் அவர் 15 பந்துகளில் 50 ஓட்டங்களை எடுத்தமை நம்ப இயலாத விடயமாகும்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிரடி வீரரான கிறிஸ் கெய்லின் ஆட்டம் இந்த ஐ.பி.எல். தொடரில் மோசமாக இருந்தது. இதுவே பெங்களூர் அணியின் சரிவுக்கு முக்கிய காரணமாகும். அவர் 8 ஆட்டத்தில் விளையாடி 152 ஓட்டங்களையே எடுத்தார். சராசரி 19 ஆகும். அதிகபட்சமாக 77 ஓட்டங்களை எடுத்தார். 2 ஆட்டங்களில் 'டக்அவுட்' ஆனார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பௌத்தத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்த சாசனத்தைப் பேணிப் பாதுகாப்பது தொடர்பாக அரசமைப்பில் உள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் அவர் கூறினார்.

நேற்று முற்பகல் பத்தரமுல்லை அபேகம வளாகத்தில் நடைபெற்ற ரணவிரு வீடுகள் மற்றும் காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச வெசாக் தின நிகழ்வு இலங்கையில் நடைபெறுவது பௌத்த தத்துவத்தின் உன்னத செய்தியை உலகெங்கும் எடுத்துச் செல்லும் நோக்கிலேயாகும் என்றும் அவர் கூறினார்.

நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் படையினர் மேற்கொண்ட பணிகளை இந்நாட்டு மக்கள் ஒருபோதும் மறந்துவிட முடியாது எனக்குறிப்பிட்ட ஜனாதிபதி, தற்போது வழங்கப்படும் சலுகைகளை மேலும் அதிகரித்து அவர்களது நலன்பேணலுக்காக மேற்கொள்ள வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் பொறுப்புடன் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

தான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் இராணுவத்தின் நலன் பேணலுக்காகப் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களைத் தாம் நடைமுறைப்படுத்தியுள்ளார் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (உ)

## பலாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரும், தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர்களுள் ஒருவருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

நாளை மாலை கொழும்பு கட்டுநாயக்காவில் வைத்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்கவிருக்கும் தமிழ்க் கூட்டமைப்பின் குழுவில் சுரேஷ் பிறேமச்சந்திரன் இடம்பெற்றுள்ளார் என்பது தெரிந்ததே.

மக்களுடைய காணிகளைச் சுவீகரிக்காமல், பலாலி விமான நிலையத்தைப் பிராந்திய விமான நிலையமாக விஸ்தரிக்கவும் –

காங்கேசன்துறைத் துறைமுகத்தைப் பாரிய அளவில் அபிவிருத்தி செய்யவும் –

இலங்கை – இந்திய அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நேற்று முன்தினம் வடக்கு மாகாண சபையில் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கொண்டு வந்த பிரேரணை ஏகமனதாகத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டமை தெரிந்தே. (உ)

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலிப்பு எதனையும் இலங்கை அரசுத் தலைவர்களிடம் உடனடியாக வெளிக்காட்டக்கூடிய நிலை இருக்காது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

நாளை பிற்பகல் 3 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தை ஒட்டியே எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவை இந்தியப் பிரதமர் சந்திக்கின்றார் என்பது தெரிந்ததே.

தமது இந்த ஒருநாள் இலங்கை விஜயத்தின்போது இ.தொ.கா., தமிழ் முற்போக்குக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய தமிழர் தரப்புக்களைச் சந்தித்துப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கியுள்ள இந்தியப் பிரதமர், இலங்கை அரசுத்தலைவர்களுடன் உத்தியோகபூர்வமாகப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– தங்களுக்கு வேலை வழங்கக் கோரி தொடர் போராட்டம் நடத்தி வரும் வேலையற்ற பட்டதாரிகள் சார்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டதாக இணையத் தளச் செய்திகள் தெரிவித்தன.

வடமாகாண சபையின் முன்பாக நேற்று முன்தினம் வடமாகாண முதலமைச்சரைச் சபை வளாகத்திற்குள் செல்லவிடாது தடுத்து நிறுத்தி வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம் மேற்கொண்டனர்.

இதன்போது, வேலையற்ற பட்டதாரிகள் வடமாகாண முதலமைச்சருடன் கடும் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் வடமாகாண முதலமைச்சர் அன்றைய வடமாகாணசபை அமர்வில் கலந்துகொள்ள முடியாமல் திரும்பிச் செல்ல வேண்டி ஏற்பட்டது.

இதன் பின்னர் வடமாகாண முதலமைச்சர் வெளியிட்டிருந்த அறிக்கையில் தன்னுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தபோது பட்டதாரிகள் அதட்டலான முறையில் வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டனர் எனக் குற்றம் சாட்டியிருந்தார்.

இது தொடர்பில் யாழ். மாவட்டச்செயலகத்திற்கு முன்பாக 73 ஆவது நாளாகவும் காலவரையற்ற கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொண்டு வரும் வேலையற்ற பட்டதாரிகள் நேற்றுக் கருத்து வெளியிடுகையில் –

வடமாகாண முதலமைச்சருடன் வடமாகாண சபைக்கு முன்பாக நேற்று (நேற்றுமுன்தினம்) இடம்பெற்ற கலந்துரையாடலில் நாம் அதட்டலான முறையில் வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபட்டோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், எங்களுக்கு முதலமைச்சர் மீது தனிப்பட்ட கோபமோ அல்லது பகையோ இல்லை. நாங்கள் எமது பிரச்சினைக்கான தீர்வைத்தான் அவரிடம் எதிர்பார்த்தோம்.

இந்தக் கலந்துரையாடலின் போது அவரது மனம் உளைச்சலுக்குள்ளாகும்படி நாங்கள் செயற்பட்டிருந்தால் அவரிடம் மன்னிப்புக் கோருகின்றோம். – என வேலையற்ற பட்டதாரிகள் குறிப்பிட்டனர் என அச்செய்தியில் கூறப்பட்டது. (உ)

## மிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் அழைப்பின் பேரில் பட்நாயக் இலங்கை வந்திருந்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு அருகில் உலகின் மிக நீண்ட – 40 அடி நீளம் கொண்ட – மணல் புத்தரை அவர் வடிவமைத்துள்ளார்.

சர்வதேச அளவில் பாராட்டப்பட்ட கலைஞர் சுதர்சன் பட்நாயக், சமீபத்தில் 10ஆவது மாஸ்கோ மணல் கலை சாம்பியன்ஷிப் போட்டியில் தங்க பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கைத்...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"உத்தியோகபூர்வப் பேச்சுக்கள் ஏதும் ஒழுங்குபடுத்தப்படவில்லை. உரையாடலுக்கான விடயங்கள் எவையும் அடையாளப் படுத்தப்படவில்லை. எனினும், இந்த விஜயத்தின் போது இலங்கைத் தலைவர்களுடன் பிரதமர் மோடி நெருங்கி, ஊடாடிப் பழகுவார். இருநாட்டு உறவுகள் பேணப்படும்.'' – என வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர் சஞ்சய் பாண்டே புதுடில்லியில் தெரிவித்தார். (உ)

# இராணுவத்தினரின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் வெசாக் நிகழ்வு







கிளிநொச்சி, மே 11

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் மைதானத்தில் இராணுவத்தின் ஏற்பாட்டில் சிறப்பாக வெசாக் பண்டிகை இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று மாலை ஆறு மணிக்கு ஆரம்பிக்கப் பட்டது.

கிளிநொச்சிப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் அஜித் காரிய கரவன, மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெலிகன்ன உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு வெசாக் வலயத்தைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளனர்.

இதன்போது மத வழிபாடுகளிலும் அவர்கள் ஈடுபட்டனர். மேலும், வெசாக் பண்டிகை தொடர்பாக கிளிநொச்சி படைகளின் தலைமையகம் அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :–

2561ஆவது வெசாக் நிகழ்வினை முன்னின்டு கிளிநொச்சி பாதுகாப்புப் படையினரால் நடத்தப்படும் வெசாக் திருவிழா 2017 மே மாதம் 10ஆம் 11ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறுகிறது.

புனித பாகங்களின் கண் காட்சி, வெசாக் கூடு கண்காட்சி, பக்திப் பாடல், இசை நிகழ்வு மற்றும் தினமும் அன்னதானம் என்பவற்றால் சிறப்பு பெறும் இந்த நிகழ்வில் அனைத்து இலங்கையரையும் அன்புடன் வரவேற்கிறோம். – என்று உள்ளது. (உ)

# மோடியை யாழ். செல்லுமாறு கோருகின்றார் பழ.நெடுமாறன்

சென்னை, மே 11

புத்த மாநாட்டில் கலந்து கொள்ள கொழும்பு செல்லவிருக்கும் பிரதமர் மோடி யாழ்ப்பாணத்திற்கும் சென்று அங்குள்ள தமிழர்களின் நிலையை நேரில் கண்டறிய வேண்டும் என தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சர்வதேச வெசாக் தினத்தை முன்னிட்டு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கை செல்கிறார். இந்நிலையில் இது குறித்து தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறன் வெளியிட்டுள்ள அறிக்கை யிலேயே மேற்படி வலியுறுத் தப்பட்டுள்ளது.

அவர் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில்–

2012ஆம் ஆண்டில் பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு நடைபெற்றபோது அதில் கலந்துகொண்ட பிரிட்டிஷ் பிரதமர் யாழ்ப்பாணம் சென்று தமிழர்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து இலங்கை ஜனாதிபதியிடம் தனது கண்டனத்தை நேரில் தெரி வித்தார்.

அதைப்போல பிரதமர் மோடியும் ஈழத்தமிழர்களையும் அவர்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை நேரில் கேட்டறிந்து இலங்கை அரசிடம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு வற்புறுத்த வேண்டும்.

சிங்கள நட்புறவுக்காக ஈழத் தமிழர்களைப் பலிகடாக்களாக்கக்கூடாது. அதைப்போல தமிழக மீனவர்களை சிங்களக் கடற்படை சுடுவதையும் தாக்குவதையும் உடனடியாக நிறுத்துமாறு கண்டிப்பாகக் கூறவேண்டும்.

இவற்றையெல்லாம் செய்வதற்கு சிங்கள அரசு முன்வராவிட்டால் அந்த நாட்டிற்கு எத்தகைய பொருளாதார மற்றும் இராணுவ ரீதியான எந்த உதவிகளையும் இந்திய அரசு செய்யக் கூடாது.– என வலியுறுத்தியுள்ளார்.

## சந்திரிகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு ஆங்கில இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அதில் அவர் மேலும் கூறிய முக்கிய விடயங்கள் வருமாறு :–

நாங்கள் சந்திரிகாவின் அந்த யோசனைத் திட்டத்தை நிராகரிக்கவில்லை.

உண்மையில் எங்கள் பிரதிநிதிகளான நீலன் திருச்செல்வம் மற்றும் அரசுப் பிரதிநிதியான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆகியோரின் கூட்டுமுயற்சியிலேயே அந்தத் திட்டம் தயாரானது.

அந்த யோசனைத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டபோது ஐ.தே.க. அதை எதிர்த்தது. அதற்குச் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. அந்தத் திருத்தங்கள் எமது கோரிக்கைகளைத் திருப்தி செய்யவில்லை. அதனால் அதனை எதிர்த்தோம். ஆனால், அந்தக் கட்டமைப்பை நாம் நிராகரிக்கவில்லை.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகர் ஏ.எச்.எம். அஷ்ரப்பின் இணக்கமான பங்களிப்பு மற்றும் உடன்பாட்டுடன்தான் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது என்பதும் கவனிக்கத்தக்கது.

வடக்கு, கிழக்கு இணைப்பு மூலமே அரசியல் தீர்வு காணலாம் என்று நாம் கருதுகிறோம். அதற்கு இந்தத் தீர்வுயோசனை நல்ல அடிப்படை.

கேள்வி :– முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சியில் இடமளிக்கத் தயார் என்று தற்போது அறிவித்துள்ளீர்கள். ஆனால், பொதுத் தேர்தல் சமயத்தில் அவர்களுக்கு வேட்பாளர்கள் இடமளிக்க நீங்கள் மறுத்து விட்டீர்கள். தற்போதைய நிலையில் அவர்களுடன் சேர்ந்து செயற்பட எத்தகைய சாதகமான வாய்ப்புக்கள் வந்துள்ளன?

பதில்: – விடுதலைப் புலிகளின் நியாயமான அரசியல் நிலைப்பாட்டையும், போராட்டத்தையும் நாங்கள் எப்போதும் ஏற்றுக்கொண்டே வந்திருக்கின்றோம். ஆனால், அவர்களின் ஆயுதப் போராட்டத்துக்கு நாங்களும் பங்களித்தோம் என்று கூற முடியாது.

யுத்தம் முடிந்து ஆறு அல்லது ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் 'ஜனநாயகப் போராளிகள்' என்ற கட்சியை உருவாக்கிய முன்னாள் போராளிகள் சிலர் எங்கள் கட்சியின் வவுனியா இணைப்புக்குழுக் கூட்டத்துக்கு வந்தனர். அரசியல் பயணத்தில் எங்களுக்கு இணையாக – பக்கபலமாக – பயணிக்கவிரும்புகின்றனர் என எம்மிடம் தெரிவித்தனர்.

எனினும், ஜனநாயகப் போராளிகள் அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தி எங்களுடன் பேச்சுக்களைத் தொடங்கிய அந்த நான்கு அல்லது ஐந்து உறுப்பினர்களின் பின்னணி குறித்து விசாரித்து அறிந்து கொள்ளக்கூடிய நிலையில் நாங்கள் இருக்கவில்லை.

பொதுத் தேர்தல் நெருங்கி விட்ட அந்தச் சூழலில் எமக்குப் பரிச்சயமற்ற அவர்கள் குறித்து எம்மால் விசாரித்து அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை. எனவே, அவர்களுக்கு வேட்பாளர் இடமளிப்பதைத் தவிர்த்துக் கொண்டோம்.

தற்போதைய சூழலில் இந்த எட்டு வருடங்களில் பல மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. இன விடுதலைக்காகப் போராடித் தியாகங்கள் பல புரிந்தவர்கள் என நாங்களும் அவர்களைப் புரிந்துகொண்டுள்ளோம். இந்தத் திருப்புமுனையில், அவர்களும் (எங்களைப் போன்று) ஒரே அரசியல் நிலைப்பாட்டில் உள்ளமையால் எங்களின் ஜனநாயகப் போராட்டத்தில் அவர்களையும் மீள இணைத்துக் கொள்ள முடிவுசெய்துள்ளோம். அவர்களின் நகர்வுகளை நீண்ட காலம் அவதானித்த பின்னரே இந்த முடிவை எடுத்துள்ளோம்.

இந்த யோசனையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் முன்வைப்போம். நாங்கள் விடுதலைப் புலிகளின் முன்னாள் பெண் போராளிகளுக்கும் அரசியலில் தகுந்த இடமளிப்போம்

எங்களின் ஜனநாயகப் போராட்டத்தில் பெண் போராளிகளின் பிரதிநிதித்துவம் குறிப்பிடத்தக்களவு முக்கியத்துவமானது என நாம் கருதுகின்றோம். – என்றார். (உ)

# தமிழ் மக்களது காணி விடுவிப்புக்கும் தேசிய பாதுகாப்புக்கும் என்ன தொடர்பு?

## கேள்வி எழுப்புகிறார் டக்ளஸ் தேவானந்தா



யாழ்ப்பாணம், மே 11

யுத்தம் நிலவிய காலப் பகுதிகளில் பாதுகாப்புக் காரணங்களுக்கெனக் கையகப் படுத்தப்பட்ட எமது மக்களின் காணி, நிலங்களில் இன்னும் விடுவிக்கப்படாதுள்ள காணிகளுக்கும், தேசியப் பாதுகாப்புக்கும் இடையில் எவ்விதமான தொடர்புகளும் இல்லை.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புடன் எமது மக்களது காணி, நிலங்களைத் தொடர்புபடுத்தி இவ்வாறான கருத்துக்களைக் கூறி, எமது மக்களது சொந்தக் காணி, நிலங்களைத் தொடர்ந்து முடக்கி வைத்திருப்பதற்கான முயற்சிகளே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

யுத்தம் நிலவிய காலப் பகுதியில் எமது மக்களது காணி, நிலங்கள் பாதுகாப்புப் படைகளால் கையகப்படுத்தப்பட்டிருந்தாலும், தற்போது யுத்தம் முழுமையாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, பல வருடங்கள் கழிந்துள்ள நிலையில், மீண்டும் இந்த நாட்டில் யுத்தமொன்று ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என நான் நம்பவில்லை.

சுயலாப அரசியல் மற்றும் இனவாதம் கருதி ஒரு சிலர் இந்த நாட்டில் மீண்டும் யுத்தமொன்று வருமெனக் கூறி வருகின்றனர்.

இவர்களது கருத்துகளைக் கேட்டு, எமது மக்களின் காணி, நிலங்களை அதற்குக் காவு கொடுக்க முடியாது.

எமது மக்கள் வாழ்வதற்காகவும், தங்களது வாழ்வாதாரங்களை முன்னெடுப்பதற்காகவுமே தமது காணி, நிலங்களைக் கோரி போராடி வருகின்றனர்.

இந்தக் காணி, நிலங்கள் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தவை. எமது மக்களது வாழ்க்கையுடன் உணர்வு ரீதியாகப் பின்னிப் பிணைந்தவை. எனவே, இவற்றை எமது மக்களுக்கென விடுவித்து, பல்வேறு பாதிப்புக்களுக்கு உள்ளாகியிருக்கும் மக்களை நிம்மதியாக வாழ வழி செய்ய வேண்டியது இந்த அரசின் பொறுப்பாகும்.

அதே நேரம், தேசிய பாதுகாப்புக் கருதி படைகள் அங்கு நிலைகொள்ள வேண்டுமாயின், அதற்கேற்ப, உரிய பகுதிகளின் மக்கள் தொகைக்கும், இன விகிதாசாரத்துக்கும் ஏற்ற வகையில் படைகள் நிலைகொள்வதற்குப் பொருளாதார வளங்கள் குன்றிய, அரச தரிசு நிலங்கள் பெருந் தொகையில் இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்த முன்வர வேண்டும்.

இவ்வாறான நிலைமைகள் இருக்கின்றபோது, எமது மக்களின் சொந்தக் காணி, நிலங்களுக்கும் தேசிய பாதுகாப்புக்கும் முடிச்சுப் போட்டுக் கொண்டு, காலத்தை இழுத்தடிக்கக் கூடாது.

எமது மக்களது பிரச்சினைகள் எந்தளவுக்குச் சுமுகமாகத் தீர்க்கப்படுகின்றனவோ, அந்தளவுக்கு விரைவாக இந்த நாட்டில் தேசிய நல்லிணக்கம் உட்பட அனைத்து விடயங்களையும் முன்னெடுக்க முடியும்.-என்றார். (ஐ)

## அமைச்சரவை மாற்றம் தாமதிக்கும் நிலையில்!

கொழும்பு, மே 11

தற்போதைய சூழ்நிலையில் அமைச்சரவை மாற்றம் இடம்பெற வாய்ப்பில்லை என்று அரச உயர்மட்ட வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இலங்கைக்கு வெளிநாட்டுத் தலைவர்கள் விஜயம் செய்யவுள்ளமை மற்றும் இலங்கை பிரதமரின் வெளிநாட்டு விஜயங்கள் என்பன தற்போது இடம்பெறவுள்ளன.

இந்த நிலையில் அமைச்சரவை மாற்றம் தற்போதைக்கு இடம்பெற வாய்ப்பில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். எனவே, அவரின் விஜயம் முடிவடையும்வரை அமைச்சரவை மாற்றத்துக்கு வாய்ப்பில்லை.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் சீனாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்த நிலையில் தாமதிக்கும் நிலைமையே காணப்படுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## குருநகர்ப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பு ஊசி

யாழ்ப்பாணம்,மே11

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த குருநகர்ப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு-

விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி (ஏ.ஆர்.வி.) எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் போடப்படவுள்ளது என யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி எஸ். உமாசுதன் அறிவித்துள்ளார்.

குருநகர்ப் பகுதியில் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணமாக 30 ரூபா செலுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி போடப்படும் நாள்கள், இடங்கள் குறித்து 'காலைக் கதிரில்' தொடர்ச்சியாக விவரங்கள் வெளியிடப்படும். (இ)

## ஈழத்து நூல்கள் ஆவணவாக்கல் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே11

நூல் தேட்டம் நிறுவனமும் இணுவில் பொது நூலகமும் இணைந்து நடத்தும் ' ஈழத்து நூல்கள் ஆவணவாக்கல்' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு இணுவில் பொது சன சமூகக் கட்டடத்தில் இணுவில் பொதுநூலகத் தலைவர் ஏ.கோமளன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக லண்டன் அயோத்தி நூலக சேவைகள் நிறுவுநரும் நூலகவியலாளருமான என். செல்வராஜா கலந்துகொள்வார். (இ)

## மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்பட மாட்டா!

கொழும்பு, மே 11

எந்தக் காரணத்துக்காகவும் மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்படமாட்டா என்று மின்வலு எரிசக்தி பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாள்களில் மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்பட உள்ளன என பிரசாரம் செய்யப்படுகின்றது.

எனினும், இந்த விடயம் தொடர்பான மக்கள் தேவையற்ற பீதியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை. எமது அரசு எந்தவொரு காரணத்துக்காகவும் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தாது என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## இலங்கைவேந்தன் கலையரங்கத்தில் இயல், இசை, நாடக அரங்கு

### இரண்டாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே 11

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல்,இசை, நாடக அரங்கு நேற்று புதன் கிழமை ஆரம்பமானது. இந்த நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை இடம்பெறும்.

யாழ்ப்பாணம், நீராவியடி கல்லூரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி கலையரங்கத்தில் நாளாந்தம் நிகழ்வுகள் நடைபெறும்.

இன்றைய ,இரண்டாம் நாள் நிகழ்வு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பா.பாலகணேசன் தலைமையில் இடம் பெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர். விக்னேஸ்வரன் கலந்து கொள்வார்.

சித்தார்த்தன், பிரதித்தன் குழுவினரின் மங்கல இசையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

நாதஸ்வரம்:பி.சித்தார்த்தன் பி.பிரதித்தன், தவில்: சு.விபூஷணன், மானிப்பாய் அமரன்.

தொடர்ந்து ஏழிசை மிருதங்க நர்த்தனாலய மன்ற மாணவன் கண்ணதாஸ் தமிழ்வேந்தனின் திருமுறை ஓதல் இடம்பெறும்.

அடுத்து ஆசியுரையை திருமறைக்கலாமன்ற நிர்வாக இயக்குநரும், சென்பற்றிஸ் கல்லூரி அதிபருமான அருட் திரு. ஜெரோ செல்வநாயகமும், வாழ்த்துரையை மூத்த இசையமைப்பாளர் இசைவாணர் எம்.கண்ணனும் நிழ்த்துவர்.

தொடர்ந்து சைவவித்தியா விருத்திச் சங்க ' சைவ சிறுவர் இல்ல' மாணவர்கள் வழங்கும் கோலாட்டம் இடம்பெறும். இதில் திருமதி யாழினி ரதீஸ்வரனின் நட்டுவாங்கமும் திருமதி வத்சலா கருணாகரனின் பாட்டும், திருமதி இந்து மதி தயாபரனின் வயலினும், ரி.சிவகுமாரின் மிருதங்கமும் இடம் பெறவுள்ளன.

அரியாலையூர் மிஷாந்தி செல்வராஜா வழங்கும் 'முத்தமிழ் இனிமை' எனும் தலைப்பில் கவிதை மழையும் இடம் பெறவுள்ளன.

இசை விருந்தில் என்.பரந்தாமன், எஸ்.சிவமைந்தன் ஆகியோரின் பாட்டும், அ.ஜெயராமனின் வயலினும், நல்லை க. கண்ணதாஸின் மிருதங்கமும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து 'தொன்மம்' கலைக் குழுவினரின் பறை இசை நடனமும். 'நிருத்திய கீதாலயம்' மாணவிகள் வழங்கும் நிருத்தியாஞ் சலி இடம் பெறும். இதில் திருமதி அகல்யா ராஜபாரதியின் நட்டுவாங்கமும், திருமதி சுகந்தி இரட்ணேஸ்வரனின் பாட்டும், அ.ஜெயராமனின் வயலினும், எஸ். துரைராஜாவின் மிருதங்கமும் இடம் பெறவுள்ளன.

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியினர் வழங்கும் 'மாமிக்கு வாச்ச மருமகள்' நகைச்சுவை நாடகமும்-

கலைஞர் கௌரவிப்பு, பிரதம விருந்தினர் உரையும் இடம் பெறும்.

தொடர்ந்து வசந்தம் வில்லிசை குழு வினர் வழங்கும் 'நாவலர் இன்று இருந்திருந்தால்...' வில்லிசை இடம் பெறும். (இ-ச)

## விவசாயப் பட்டதாரிகள் ஒன்று கூடல்

யாழ்ப்பாணம்,மே11

வடமாகாணத்தில் விவசாயத் துறையில் விவசாயப் பட்டதாரிகளின் வகிபங்கு எனும் தொனிப் பொருளில் ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். கிறீன் கிறாஸ் ஹோட்டலில் இடம்பெறும்.

அழிந்து வரும் விவசாயத் துறையின் மீள்எழுச்சிக்கு வலுச் சேர்க்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பட்டதாரிகள் அனைவரையும் இந்த ஒன்றுகூடலில் கலந்து கொள்ளுமாறு ஒருங்கமைப்புக்குழு கேட்டுக்கொண்டுள்ளது. (இ)

## கோழி வியாபாரத்துக்கு இடம் ஒதுக்கவில்லை

தென்மராட்சி, மே 11

சாவகச்சேரி பொதுச் சந்தை தற்போது நவீன கட்டட வசதிகளுடன் இயங்கி வருகின்ற போதிலும், கோழி வியாபாரத்தில் ஈடுபடுவோருக்கு எந்தவிதமான நிழல் கொட்டகைகளும் அமைக்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

மரநிழலில் வைத்தே அவர்கள் தாம் கோழி வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

தற்போது நிலவும் கடும் வெப்ப சூழ்நிலையில் கொட்டகைகள் இன்றி கோழி வியாபாரத்தில் ஈடுபடுகின்றமை சிரமமாகக் காணப்படுகிறது என்றும் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், மழை காலத்திலும் கோழி கொட்டகை இன்மையால் சிரமம் அடையும் நிலையில் தாம் உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர். (ஐ-21)


# மேல்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 10 ஆல் உயரும்

கொழும்பு, மே 11

மேல் நீதிமன்ற நீதிபதியின் எண்ணிக்கையை75இலிருந்து 85 ஆக அதிகரிப்பதற்கு வழி செய்யும் விதத்தில் நீதித்துறை சட்டமூலத்தில் திருத்தம் செய்யப்படும்.

இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளமையை அடுத்து, அதற்கான பரிந்துரை சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பல வழக்குகள் விசாரிக்கப்படாமல் தேங்கிக் கிடக்கின்றமையாலேயே நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (உ)




# காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் சித்தன்கேணியில்!

காரைநகர், மே 11




'வடக்கு, கிழக்கில் வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டோருக்கான குரல்' அலுவலகம் சித்தன்கேணிக்கு அருகாமையில் நேற்று முற்பகல் 11 மணிக்குத் திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் வலி. வடக்குப் பிரதேச சபையின் முன்னாள் உபதலைவர் சஜீவன், வட்டுக்கோட்டைத்தொகுதி இலங்கைத்தமிழரசுக்கட்சியின் செயலாளர் த.முரளிரூபன், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (உ)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று வெசாக் தின நிகழ்வுகளின் போது....

# விகாரையில் குளவித் தாக்குதல் ஐம்பது பக்தர்களுக்குப் பாதிப்பு

சிலாபத்துக்கு அப்பால் முத்துலம், விஜயகடுபத ஸ்ரீ விஜய விகாரையில் வெசாக்வழிபாட்டில் ஈடுபட்டிருந்த சிலர் குளவித் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். இதன்போது காயமடைந்த சுமார் 50 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

சம்பந்தப்பட்ட விகாரையின் விகாராதிபதியும் குளவித் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்களில் 40 பேர் சிலாபம் மருத்துவமனையிலும், 10 பேர் ஆனவிலுந்தாவ மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளும் அடங்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அடம்பன் விபத்தில் பொலிஸ் அதிகாரி அருந்தப்பு

மன்னார் – மதவாச்சி பிரதான வீதி, முருங்கன் 11ஆம்கட்டைப்பகுதியில் நேற்றுக்காலை 11.45 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் அடம்பன் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி அதிஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மதவாச்சி வீதியூடாக மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அடம்பன் பொலிஸ் நிலையத்தை நோக்கி கார் ஒன்றில் அவர் பயணித்துக் கொண்டிருந்தபோதே முருங்கன் – கட்டுக்கரைக் குளம் 11 ஆம் கட்டைப் பகுதியில் அந்தக் கார் விபத்துக்குள்ளாகியுள்ளது.

அதிவேகமாகப் பயணித்த கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில், வீதியை விட்டு விலகி அருகில் நின்ற மரம் ஒன்றுடன் மோதியதால் விபத்து நேர்ந்துள்ளது.

இதன்போது அந்தக் காரை செலுத்திய அடம்பன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிறு காயங்களுடன் அதிஷ்டவசமாக உயிர்தப்பியுள்ளார். கார் கடும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளது.



சம்பவ இடத்திற்கு வந்த அடம்பன் பொலிஸார் மற்றும் அடம்பன் பொலிஸ் நிலைய வீதி போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (உ)

# இந்திர விழாவால் ஜொலித்த வல்வை



வரலாற்றுச் சிறப்பு மிக்க வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்து மாரி அம்மன் தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு வல்வை மக்களால் 50 ஆவது ஆண்டாக 'இந்திர விழா நடத்தப்பட்டது. நேற்றுக் காலை இடம்பெற்ற தீர்த்தோற்சவத்தை அடுத்து, மாலையில் இந்திரவிழா இடம்பெற்றது. இதற்கான ஏற்பாடு கள் வல்வைநகரில் மிகப்பிரமாண்டமாக மேற்கொள்ளப்பட்டிருந்தன. வீதிகள் தோறும் வாழைகள், தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன.

இரவு மின்ஒளியில் ஊரே ஜொலிக்கும்வகையில் இந்திரவிழா நடைபெற்றது. இரவிரவாக வல்வெட்டித்துறையில் கலை நிகழ்வுகள், இசை நிகழ்வுகள் நடைபெற்றன.

யாழ்ப்பாணத்தில் புகழ் பூத்த
ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியில்
புதிய ஆங்கில டிப்ளோமா
பிரிவு ஆரம்பம்



DIPLOMA IN ENGLISH
புதிய பிரிவு ஆரம்பம்
13.05.2017 @ 10.00 A.M
(சனி/ஞாயிறு தினங்களில் காலை 10.00 - 12.30 மணி வரை இடம்பெறும்)
காலம் : 6 மாதங்கள்

E-CITY COLLEGE OF ENGLISH
& IT SKILLS DEVELOPMENT
இல. 372 D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
( வீரமாகாளி அம்மன் கோவில் அருகில் )
Tel : 0212217106 / 0770610271
0774924166
web: ecitycollege.lk
முற்றிலும் குளிரூட்டப்பட்ட வகுப்பறை

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.